விலைரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 27 றஜப் 15 இதழ் 86

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10—5—82


மாவட்ட சபையை

## பொதுச்சபையில் எதிர்த்தவர் பிரசாரகூட்டத்தில்ஆதரித்தார்

### 'செங்கதிர்' வெளியீட்டு விழாவில் 'தர்மர்'

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின்பொதுச்சபையில்மாவட்ட சபையை ஏற்பது தொடர்பான தீர்மானம்கொண்டுவந்த போது 12 பேர் எதிர்த்துவாக்களித்தனர். ஏனைய 82 பேரும் ஆதரித்து வாக்களித்தனர். எதிர்த்து வாக்களித்த திரு.செ சந்திரகாசன் பின்னர்தெல்லிப்பழையில் நடந்த மாவட்ட சபை பிரச்சாரக் கூட்டத்தில் ஆதரித்து உரையாற்றினர். திருமலையில் தங்கியிருந்து கூட்டணியினரின் வெற்றிக்காக உழைத்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணியின் ஏடான 'செங்கதிர்' வெளியீட்டுவிழாவில் உரை நிகழ்த்திய மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

# போக்லண்ட் தீவுகள் மீது பிரிட்டிஷ் படைகள் தாக்குதல்!

## கடற்படையின் அதிரடிப்பிரிவு தீவுகளில் இறங்கியுள்ளது

### ஆர்ஜென்டீனு அறிவிப்பு

புவனஸ்அயர்ஸ், மே. 9

போக்லண்ட் தீவுகளை பிரிட்டிஷ் படைகள் தாக்க ஆரம்பித்துள்ளதாக ஆர்ஜென்டீனு அறிவித்துள்ளது. இன்று அதிகாலை 1-40 மணி தொடக்கம் பிரிட்டிஷ் படைகள் போக்லண்ட் தீவுகளை தாக்கஆரம்பித்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.

போக்லண்ட் தீவுகளில் பிரிட்டிஷ் கடற்படையின் அதிரடிக்கடற்பிரிவு காணப்படுவதாகவும் ஆர்ஜென்டீனு கூறியுள்ளது. பிரிட்டிஷ்படைகள் போக்லண்ட் தீவுகளில் இறங்கத் தயார் நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

#### பெரும் உயிர்ச்சேதம் ஏற்படலாம்?

பிரிட்டிஷ் துருப்புக்களின் தாக்குதலகளினுல் பெரும் உயிர்ச்சேதமும் ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

#### 48 மணித்தியால அவகாசம்

போக்லண்ட்தீவுகளிலிருந்து ஆர்ஜென்டீனு துருப்புக்கள் வெளியேறுவதற்கு பிரிட்டனுல் 48 மணித்தியால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

#### ஆர்ஜென்டீனுவுக்குள் பிரவேசிக்கத்தடை

ஆர்ஜென்டீனுவுக்குள் பிரிட்டிஷ் பிரஜைகள் பிரவேசிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

#### அமைச்சர் கண்டனம்

இதேவேளை ஆர்ஜென்டீனு மீது விதிக்கப்பட்டுள்ள வர்த்தகத் தடைகளை அந்நாட்டின் பொருளாதாரத் துறையமைச்சர் கண்டித்துள்ளார்.

கொலம்பியா, வெனிசூலா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகள் போக்லண்ட் தீவுகள் நெருக்கடியை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளன. (வெ)

## ஐ நா. செயலகத்தில் பிரி-ஆர்ஜென் பிரதிநிதிகள்

லண்டன். மே 9

ஐ. நா. தலைமைச் செயலாளருடன் ஆர்ஜென்டீனு, பிரிட்டன் பிரதிநிதிகள்போக்லண்ட் பிரச்னைக்கு தீர்வு காணுமுகமாக இரண்டாவது சுற்றுப் பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

சில விடயங்களில் இரு தரப்பினருக்குமிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதா ஐ. நா. செயலகம் அறிவித்துள்ளது.

அதேநேரத்தில் தென்அத்திலாந்தி நோக்கி மேலும்படைகளை பிரிட்டன் அனுப்பிவருகின்றது.

பிரிட்டனின் புதிய யுத்த வலய பிரதேசம் குறித்து கண்டனம் தெரிவித்த ஆர்ஜென்டீனு, பிரிட்டன் அப்பிரதேசத்தில் பிரவேசிப்பதற்கு தடை விதித்துள்ளது.

நாட்டைவிட்டுவெளியேறும் ஆர்ஜென்டீனு பிரஜையொருவர் தொடர்ந்து இரண்டு வருடங்கள் வெளிநாட்டில் தங்கினுல் திரும்ப ஆர்ஜென்டீனுவுக்குள் வர அனுமதிக்கப்படமாட்டார் என ஆர்ஜென்டீனு அறிவித்துள்ளது.

எரிந்து கொண்டிருக்கும் யுத்தக்கப்பலான 'ஷெபீல்ட்' நவீன ஏவுகணைகளைக் கொண்டது என பிரிட்டிஷ் அரசுதெரிவித்துள்ளது. (கு)

## ★ ஊர்காவல் படை அமைப்பு: பொலிஸ் பாதுகாப்பு குறித்து அச்சம் தெரிவிக்கப்படுகிறது

(கொழும்பு)

ஊர்காவல் படை சரியான விதிமுறைகளுக்கிணங்க அமைக்கப்படாதுபோனுல்பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிபார்சின்மீது அமைக்கப்பட உள்ள ஊர்காவல்படையில் நாளடைவில் பயங்கரவாதிகளும் ஊடுருவி பொலிசாருக்கே ஆபத்தாக முடியலாமென பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனராம்.

ஊர்காவல் படையினருக்கு பொலிஸ் நிலையங்களில் சில பயிற்சிகள் அளிக்கவிருப்பதால் பயங்கரவாதிகள் பொலிஸ் நிலைய அமைப்புகளையும், பாதுகாப்பு நடவடிக்கை முறைகளையும் அறிந்துகொள்ள வழி வகுத்துவிடுமெனவும் பொலிஸ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியிருப்பதாக அறியப்படுகிறது.

முன் எச்சரிக்கையில்லாமல் ஊர்காவல்படை அமைக்கப்படுமாஞல் பாரதூரமானவிளைவுகள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளனராம்.

பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஒருபாலமாக பொலிசாருக்கு உதவியாக, ஊர்காவல்படை விஷேசமாக வடபகுதியில் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றபோதிலும்ஊர்காவல்படைக்கு எதிரான சக்தியாக அமையலாமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

பயங்கரவாத இயக்கங்கள் பொலிஸ் பிரிவுக்குள்ளும் பாதுகாப்புபடைகளுக்குள்ளும்ஊடுருவல் செய்ய முயற்சிப்பதாக பொலிஸ் அறிக்கைகள்தெளிவு

[8-ம் பக்கம் பார்க்க]

## கொள்ளை!

(வவுனியா)

மன்னுரிலிருந்து மாடு வாங்கச் சென்ற விவசாயி ஒருவரிடமிருந்து 4,000 ரூபா ஹொரப்பொத்தானை வீதியிலுள்ள மடுக்கந்தையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நான்கு இளைஞர்கள் கத்திமுனையில் இக் கொள்ளையை நடத்தியுள்ளனர். இது குறித்து வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கிருஷ்ணராசா விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (வெ)

புதுடில்லியிலுள்ள

## இந்துக் கோயில்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

புதுடில்லி, மே. 9

இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்குமிடையே மூண்டுள்ள பகைமையைத் தொடர்ந்து புதுடில்லியிலுள்ள இந்துக் கோயில்களை பொலிசார் பாதுகாத்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

பஞ்சாபில் கடந்த இரண்டு வருடங்களாக இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்குமிடையே இடம்பெற்றுவரும் வன்முறை சம்பவங்களில் இதுவரை 5பேர் பலியானதாகவும், 100 பேர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

வட இந்தியாவில் சீக்கியர்கள் வாழும் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தற்போதும் அமுலிலிருந்துவருவது தெரிந்ததே. [வெ]

## இரகசியப்பொலிஸாரினுல் காந்தியஅமைப்பு செயலாளர் 3-வது தடவையாக விசாரணை

(வவனியா)

காந்திய அமைப்புச் செயலாளர் டாக்டர் எஸ். இராசசுந்தரம் மூன்ருவது தடவையாக மீண்டும் இரகசிய பொலிசாரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பகல் யாழ்.குருநகர் இராணுவமுகாமிலிருந்துவந்த இரகசிய பொலிசாரே இவரை மூன்று மணித்தியாலங்கள் வவனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரித்தனர்.

அண்மையில் வவனியா காந்தியதலைமைக்காரியாலயம் ஆயுதப்படையினரால் சோதனையிடப்பட்டபோது அங்கிருந்து ஆயுதப்படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட முக்கிய தஸ்தாவேஜுக்களையும், ஆவணங்களையும் அமைப்பு செயலாளரிடம் கையளித்துள்ளனர். (ச)

## சட்டவிரோதமாக யானை சுட்டவருக்குப் பிணை!

[வவனியா]

காட்டு யானை ஒன்றினை சட்ட விரோதமாக சுட்டுக் கொன்றதாக சந்தேக நபரான இளைப்பாறிய கிராம சேவையாளர் ஒருவரை வவனியா மாவட்ட நீதிபதி பிணையில் செல்ல அனுமதித்தார்.

பாலமோட்டை - பூவரசன்

[8-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

காந்த ஊசியானது எப்பொழுதும் வடக்கு நோக்கியே நிற்கின்றது. ஆதலால்தான் கடலில் செல்லும் கப்பல் திசை தவறுவதில்லை. மனிதனுடைய உள்ளம் கடவுளை நோக்கியதாக இருக்கும் வரையில் இலௌகிகப்பற்று ஆகிய சமுத்திரத்தில் அவன் வழி தவறிக்கெடமாட்டான்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## கூட்டுறவின் மறுமலர்ச்சி?

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் அற்புத வளர்ச்சி யாழ். மாவட்டத்தை மட்டுமல்ல அகில இலங்கையையுமே கவர்ந்திருந்த காலம் ஒன்றிருந்தது; அது அண்மைச் சரித்திரம்.

உலகின் கூட்டுறவு நிபுணர்கள் இந்த நிறுவனத்தின் அசாதாரண வளர்ச்சியையும் திறமையான சேவையையும் பாராட்டி வந்த காலம் அது.

யாழ். மாவட்டத்தின் மூலைமுடுக்குகளிலிருந்து நோயாளிகள் மூளாய்க்கு விரைந்த காலம் அது. மூளாய் ஒரு சிறு பட்டினமாக வளரும் நம்பிக்கையை வளர்த்து வந்தது; 'கூட்டுறவுப் பட்டினம்' ஏழை மக்களின் அசைவற்றகோட்டை.

இச்சடுதியான வளர்ச்சிக்கு சுமார் 20 வருட வரலாறு — ஈடுகொடுக்குமளவில் புதிய பல கட்டிடங்கள், ஆஸ்பத்திரி தளபாடங்கள், உபகரணங்கள், விரிவடைந்த பல மருத்துவத் துறைகள், நோயாளிகளின் வசதிக்கேற்ற படுக்கையறைகள் யாவும் மின்னல் வேகத்தில் விஸ்தரிக்கப்பட்டு வந்தன. அதிர்ச்சி ஊட்டிய நிகழ்ச்சிகள் இவை.

இந்த வீரக்கதையெல்லாம் கூட்டுறவு அமைப்பில் நடைபெற்றதென்றால், அது யாழ்ப்பாணத்தாரின் இரத்தத்தில் கூட்டுறவு ஊறியிருக்கின்றதென்று அரசாங்கமும், வெளியூர் மக்களும் புகழ்மாலை சூட்டிவந்தது அண்மைக்காலச் சரித்திரம்.

எத்தனை நிறுவனங்கள், எத்தனை கூட்டத்தினர் இத்தகைய ஒரு மருத்துவ நிலையத்தை தங்கள் தங்கள் இடங்களில் அமைப்பதில் ஆர்வங்காட்டி அதன் இரகசியத்தை வடித்தெடுக்க இவ்விடத்திற்கு பலதடவை விஜயம் செய்திருப்பார்கள்?

ஆனால் அதன் இரகசியம் ஏதும் ஒன்றில் தங்கியிருந்ததா? டாக்டர்களின் மிகத் திறமையான தன்னலமற்ற சேவை, ஊழியர்களின் ஒழுங்கான, ஒழுக்கமான, கீழ்ப்படிவுள்ள சேவை; இவற்றால் கவரப்பட்ட நோயாளிகளின் உள்ளம் கனிந்த பாராட்டும் பிரசாரமும் — இவையெல்லாவற்றுக்கும் மேலான தியாக உணர்வுள்ள நிர்வாகம் — இவை அனைத்தும் ஒன்றுபட்டதே, இந்த ஆஸ்பத்திரியின் அன்றைய அதிசய வளர்ச்சி. கீழ்த்தரமான அரசியல் வால்காட்ட முடியாத காலம்.

கூட்டுறவின் சித்தாந்தம் பரிசோதனைக்குள்ளாக வேண்டுமாயிருந்தால் மூளாய் ஆஸ்பத்திரிக்குப் பலமுறை விஜயம் செய்வது தவிர்க்க முடியாத காரியமாகவிருந்த காலம் அந்தக் காலம். கலாநிதி ஆராய்ச்சிக்குகந்த ஆராய்ச்சி நிலையம் அது.

கூட்டுறவு நிர்வாகம் வேறு; ஆஸ்பத்திரி உள் நிர்வாகம் வேறு; ஆஸ்பத்திரியின் பிரதம வைத்திய அதிகாரியென்றால் மருத்துவ விடயங்களில் அவர் இட்டது சட்டம்; அவருடைய சகாக்கள் அனைவரும் ஒரு மித்த குழுவினராய், ஒரு சிறந்த குடும்பம் போல் விளங்கினர் அப்பொற்காலத்தில்.

நல்ல காரியம் ஒன்று மிகக் கவர்ச்சியாக இருந்தால் அதனைக் கவிழ்த்துவிடும் ஆசை மனிதனில் இயல்பாகவுண்டு. இதனை விளக்க முற்பட்ட ஒரு சிலர் ஒரு உத்தம நிறுவனத்தை உருக்கெடுத்துவிட்டது மருத்துவ சேவைக்கு மட்டும் ஒரு பெருநட்டமல்ல. அதனிலும் முக்கியமானது கூட்டுறவுச் சேவைக்குப் பேர்போன யாழ்ப்பாணத்துக்கு மறக்கமுடியாத ஒரு வீழ்ச்சியெனலாம்.

எங்கள் நேற்றைய பத்திரிகையில் மீண்டும் மூளாய் ஆஸ்பத்திரி தலைதூக்கத் தொடங்கிவிட்டதென்ற செய்தி அந்த ஸ்தாபனத்தின் பழைய 'வாடிக்கைகாரர்களுக்கு' ஒரு தெம்பூட்டும் செய்தி. உண்மையில் இது ஒரு மறுமலர்ச்சி தானா?

மருத்துவத்தில் மட்டுமல்ல. விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், கல்வி, போக்குவரத்துப் போன்ற துறைகளில் வட பகுதி மக்கள் தங்கள் கடின உழைப்பு, சிக்கன வாழ்வு, நேர்மை, கட்டுப்பாடு போன்ற அருங்குணங்களைச் சமூகநலனுக்குரிய திட்டங்களில் தொடர்ந்து ஈடுபடுத்துவார்களானால், தாங்கள் தங்கள் அலுவல்களை நிர்வகிக்கும் ஆற்றல் உடையவர்களென்பது நிரூபிக்கப்பட்டுவிடும்.

கூட்டுறவின் சித்தாந்தம் எவ்வளவு கூர்மையாக இப்பகுதி மக்களுக்குப் புரிகின்றதோ, அவ்வளவிற்கு இதனைக் கெடுத்துவிடும் தனிமனிதனின அல்லது தனிக் கோஷ்டியின் பொறாமை, போட்டி எங்கும் எவ்விடத்திலும் காணப்படுகிறது.

பொறாமை என்னும் பெரு நெருப்புப் பற்றிஎரிய உதவும் அழுக்கு மனதில் மலைபோல் குவிந்திருப்பதால், ஒரு சமூகத்தை இரண்டொரு பேர் அழித்துவிடமுடியும்; பொறாமைக்கிருப்பிடமான மனிதன் தான் அழிவதில் அச்சம் கொள்வதில்லை. சமூகமே, இவ்வித பெருமைகொள்வதைக் கண்டு சகிக்கமுடியாத கட்டத்தில் அவரை எரிக்கும் பெரு நெருப்பு பொறாமையுடையவனுக்கு ஜோதியிற் கலந்த 'பேரின்பத்தை' அளிக்கிறது.

நம்பிக்கை ஒளி இழந்து வாழும் தமிழ் மக்கள் மீண்டும் தலைநிமிர்த்தவேண்டுமானால் கூட்டுறவில் குடிபுகுந்திருக்கும் 'கொள்ளிவால் பேய்களை' அகற்றி, பல துறைகளிலும் டென்மார்க் மக்கள் போன்று நிதானமான, நேர்மையான ஊழியர்களை ஈடுபடுத்துவதில் வெற்றிகாணவேண்டும்.

✯ சிங்கப்பூரில் நமது இளைஞர்கள்:

# "சீதனம்தேடிச் சிங்கையில் வேலைசெய்கின்றோம்"

## இளைஞர்கள்-யுவதிகள் நிலைமைபற்றி அருட்திரு. சிங்கராயர் அடிகள்தகவல்

(பிலிப்பைன்ஸிலிருந்து நாடு திரும்பும் வழியில் சிங்கப்பூரில் சில தினங்கள் தங்கி, அங்கு வேலை செய்யும் சுமார் எண்ணூறு இளைஞர்களையும், யுவதிகளையும் சந்தித்த அருட்திரு சிங்கராயர் அடிகள் அங்கு உள்ள எமது யுவதிகள், இளைஞர்கள் பற்றி இங்கு தெரிவிக்கின்றார்.)

''நான் எதிர்பாராதவிதமாகத்தான சிங்கப்பூரில் சம்பத்திரிசியார் கல்லூரி முன்னாள் உப அதிபர் அருட்திரு ஜோண் மேரி அடிகளுடன் சில தினங்கள் தங்கச் சந்தர்ப்பம்கிடைத்தது.

சம்பத்திரிசியார் கல்லூரியில் தன்னலமற்ற சேவை மூலம் அறிவொளி யூட்டிய அருட்திரு ஜோண் மேரி அடிகள்: யாழ்ப்பாண இளைஞர்களுக்கு பலவிதமான உதவிகளை அளித்து வருவதை தேர்ந்துகொண்டு நானும் அவரின் உதவியுடன் எமது இளைஞர்களைச் சந்தித்தேன். சுமார் 6000 தமிழ் இளைய சமுதாயத்தினர் அங்கே பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ளதாக அறிந்தேன், ஆனால் சுமார் 800 பேர்வரையில் மட்டுமே சந்திக்க வாய்ப்புக் கிட்டியது. அங்கு நான் அறிந்துகொண்டது; ''வந்திட்டோம்; இனி என்னவென்று போவது'' என்ற நிலையிலேயே பல இளைஞர்கள் வாழ்கிறார்கள். இங்கு ஏஜென்சிகள் தங்களுக்கு 500, 600 சிங்கப்பூர் டாலர்கள் சம்பளம் கிடைக்குமெனக் கூறியதாகவும். ஆனால் உண்மையில் தங்களுக்கு 150—250 சிங்கப்பூர் டாலர்களே கிடைப்பதாகவும் விரக்தியுடனும் ஏஜென்சிமேல் வெறுப்புடனும்கூறினார்கள். குறிப்பாக தையல் தொழிலில் ஈடுபடவென இங்கு வந்த யுவதிகளுக்கு அவர்கள் தைப்பதற்கு ஏற்பவே கூலி கிடைக்கிறது. இந்த யுவதிகள் இயந்திரங்களில் தலைமயிர் சிக்குப்படாமல் இருப்பதற்காக தலைமுடிகளை 'பப்' செய்துள்ளனர். அத்துடன் இளைஞர்களும் யுவதிகளும் எண்ணெய் வைப்பதில்லை. காரணம் எண்ணெய் மணம் சீனர்களுக்கு பிடிப்பதில்லை. எட்டு மணித்தியாலம் கண்டிப்பாக வேலை செய்ய வேண்டிய நிலையில் உள்ள இவ்இளைஞர்கள்; எமது நாட்டில் நேரத்துக்கு ஏற்ப இயங்கிப் பழகாததினால் அங்கு சிரமப்படுகிறார்கள். சிங்கப்பூரில்எல்லாமே திட்டமிட்ட நேர ஒழுங்குக்கேற்பவே நடைபெறுகிறது.

### சம்பளம் குறைவு: தரமான வாழ்வு

''இவர்கள் எதிர்பார்த்த சம்பளம் கிடைக்கவில்லையே தவிர; தரமான வாழ்க்கையை இவர்கள் வாழ்கிறார்கள். நாலைந்து பேர் ஒருஅறையில் வாழ்கிறார்கள். டி. வி, ஒவ்வொருஅறையிலும்உண்டு. சில அறைகளுக்கு டெலிபோன் வசதிகளும் உண்டு. சமையல் உபகரணங்கள் தாராளமாக உண்டு. சமைத்துச் சாப்பிடுவதில் இளைஞர்கள் யுவதிகளை மிஞ்சிவிட்டார்கள். நான் சிங்கப்பூரில் நின்ற நாட்களில் தங்கள் விருந்தோம்பல் பண்பால் இவ் இளைஞர்கள் என்னைத் திணறடித்துவிட்டார்கள். ஒரு இரவு மூன்று சாப்பாடுகள் கூட தந்து, எனது வயிற்றை முட்ட வைத்தது அவர்கள் அன்பு! இவர்கள் கூறிய பதில்கள் எமது சிந்தனைக்கு வைக்கப்பட வேண்டியவை.

### சிந்தனை ஊட்டும் விளக்கங்கள்

• இவ் இளைஞர்களில் பெரும்பாலானவர்களிடம் நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள் என்று கேட்டதற்கு ''அம்மா சீதனம் கொண்டுவா'' என்றார். ''நாங்கள் சிங்கப்பூரில் சிக்கிக் கிடக்கிறோம்'' என்றார்கள். ஒரு யுவதி; ''அம்மாதான் சீதனம் வாங்கிறதும் அம்மாதான் சீதனம் கொடுக்கிறதும்'' என்று விரக்தியுடன் கூறினார். ஒரு சில இளைஞர்கள் ''நாங்கள் சிங்களவரை திட்டுவதில் அர்த்தமில்லை. நாங்க தான் எமது இனத்தின் எழுச்சியின் எதிரிகளாக நிற்கிறோம்'' என்றார்கள்.

தொகுப்பு: பற்றிமாகரன்

நான் அவர்களிடம்; உங்கள் ஒப்பந்தங்கள் இரண்டு வருடத்துக்கு தானே, இப்போது ஆறு ஏழு மாதங்கள் முடித்துவிட்டீர்கள். அதன் பின்னர் உங்கள் எதிர்காலத்தை எப்படி அமைக்கத் திட்டமிட்டுள்ளீர்கள். என்றதற்கு; பல இளைஞர்கள் இலங்கை திரும்பி முதலீடுகள் மூலம் கைத்தொழில் துறையில் ஈடுபடவிரும்புவதாக கூறினார்கள் ஆனால் தங்கள் முதலீடுகளை நம்பிக்கையுடன் வைப்புச்செய்யவும் தங்களை பொருளாதாரரீதியில் வழிகாட்டி ஆலோசனை கூறி அழைத்துச் செல்லவும் எந்த ஒரு தமிழ்த் தலைமைப்பீடமும் இல்லையே என்று இவ் இளைஞர்கள் ஏக்கத்துடனும், கவலையுடனும் கூறினார்கள்.

### நியூசிலாந்தை நம்பி ஏமாறுதீர்

சில இளைஞர்கள்; தாங்கள் இங்கு வந்து 18,000 ரூபா கட்டி மீளவும் நியூசிலாந்திற்குப் போகப்போகிறோம் என்றனர். ஆனால் நான் அவர்களிடம் நியூசிலாந்தில் பருவகால வேலையே உள்ளதெனவும் அதுவும் அருகிலுள்ள பாபுவர்ன் நியூகினித் தீவு மக்களுக்கே அவற்றை வழங்குகிறார்கள் எனவும் கூறினேன். அங்கு பழங்கள் கொய்வதற்கும், ஆட்டு ரோமங்களைக் கத்தரிக்கவும் சில சில மாதங்களில் மட்டுமே பிறநாட்டவர் அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆகவே நியூசிலாந்து ஒரு பகற்கனவு என்று விளக்கினேன்.

இங்குள்ள இளைஞர்கள் பெரும்பாலும் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகவேகாணப்படுகின்றனர். ஆனால் சிலர் வீடுகளில் கட்டுப்பாடுகளில் வளர்ந்ததினாலோ என்னவோ இரவில் கண்டபடி திரிகிறார்கள். யுவதிகளில் சிலர் மலேயா இன வாலிபர்களுடன் காதல் கொண்டுள்ளனர். இவர்களது திருமணப் பிரச்னை சிக்கலாகவே இருக்கும். இவர்கள் முஸ்லிம்களாக வேண்டும். அதன் பிறகும் குடியுரிமைப் பிரச்னை தலைதூக்கும். இலெக்ரோனிக்ஸ் பகுதிகளில் வேலை செய்பவர்கள் மற்றையவர்களைவிட வசதிகளைக் கூடப் பெற்றுள்ளனர்.

### ஒழுங்கான தேவ வழிபாடு

'இங்கு வாழும் இளைஞரிடை பிரதேச உணர்வு மறைந்துள்ளது. மன்னார், திருமலை, யாழ்ப்பாண இளைஞர்களெல்லாம் ஒரே தமிழ்த்தாயின் பிள்ளைகளாக வாழ்கின்றனர். மத உணர்வு இங்குள்ள இவர்களுக்கு அதிகரித்துள்ளது. தமிழில் கிறிஸ்தவ பூசை வேண்டுமென 300 இளைஞர்கள் கையெழுத்திட்டுக் கேட்டதன் பேரில் பூன்லேயில் தமிழில் பூசை நடக்கிறது. இந்து ஆலயங்களுக்கு இந்து இளைஞர்களும் ஒழுங்காகச் சென்று வருகிறார்கள். நாட்டின் நிலை பற்றியும் தமிழ் மக்களின் இன்றைய அரசியல் போக்குப் பற்றியும் இவ்விளைஞர்கள் கவலை தெரிவித்தனர். நாலைந்து மொழிகளில் அறிவிப்புப் பலகைகள் உள்ளதால் எமது இளைஞர்கள் இங்கு மொழிப் பிரச்னையை அனுபவிக்கவில்லை. அதேவேளை இவ்விளைஞர்கள் துணிவாகத் தமிழிலேயே தங்கள் தொலைபேசி உரையாடல்களைகூட நடாத்துகிறார்கள். ஆங்கிலத்தைத் தவிர்த்துவருகிறார்கள்.

சில யுவதிகள் வேலையால்வந்ததும் தபால் பெங்டியை பரிதாபமாகத் திறந்து பார்த்துவிட்டு கண்ணீருடன் தங்கள் வீட்டுவேலைகளை தொடர்வதைக் கண்டேன்.

''கம்பெனிகள் இவர்களுக்கு ஏதாவது விசேட சலுகை வழங்கி வருகிறதா? என்று கேட்டபோது அப்படிச் சிறப்பாக இல்லை. ஆனால் சில கம்பனிகள் இவர்கள் ஏஜென்சிகளுக்கு கடன்பட்டுகாசு கட்டி இங்கே வந்ததை அறிந்து மனிதாபிமான அடிப்படையில் முற்பணமாக அப்பணத்தை வழங்கிவிட்டு சம்பளத்தில் கழித்து வருகிறார்கள்.

சிங்கப்பூரில் காணப்படும் நேரத்துக்கேற்பவேலை செய்யும் பண்பு மிகவும் கவர்ந்தது. உதாரணமாக ஒரு பாலம் போடுவதற்கு நாலு மணித்தியாலங்களே போக்குவரத்தை நிறுத்தினார்கள், எல்லாவற்றையும் முதலே தயாரித்துக்கொண்டு நாலு மணித்தியாலங்களில் பாலத்தைப் போட்டு முடித்து, கீழ்ப்பாதையை போக்கு வரத்துக்கு திறந்துவிட்டார்கள். வீதி திருத்தப்படுகிறது என்றால் ஒரு மைலுக்கு முதலே அறிவிப்பு போடப்படும். பின்னர் இடைஇடையே மீளவும் அறிவிப்பு போடப்பட்டு திருத்தப்படும் இடத்தில் ''வசதியீனத்துக்கு மன்னிக்கவும்'' என்றும் எழுதி வைக்கிறார்கள். இவ்வாறாக வீதிகளைச் சுத்தமாக வைத்திருப்பது முதல் அத்தனை வேலைத் திட்டங்களும் நேரத்துக்கேற்ப நடைபெறுகிறது. இது என்னை வெகுவாகக் கவர்ந்தது.

## ரூபா 2500 அன்பளிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டி சென் திரேசா மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருப்பதையொட்டி கல்லூரி அபிவிருத்தி சபை அங்கத்தவர் ஒருவர் ரூபாய் 2500/- நிலத்தை செப்பனிட அன்பளிப்பு செய்தார். (ஏ)

## மனனப் போட்டி

சுழிபுரம்]

சுழிபுரம் பறளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கந்தரநுபூதி மனனப்போட்டி விண்ணப்பங்கள் இம்மாதம் 30ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மனனப்போட்டி அடுத்த மாதக் கடைசிப் பகுதியில் நடைபெறும்.

# “தேர்தலைப் பகிஷ்கரித்தால் தமிழினம் பாதிக்கப்படும்!

## சாதியின் மூலவேரைக்களைய கூட்டணி முயற்சிக்கிறது” -அமிர்

[கரவெட்டி]

‘‘தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் பெறுத அமோக வெற்றியை 1977ல் திரு. இராசலிங்கம் உடுப்பிட்டித் தொகுதியில் பெற்றுக் கொண்டது ஒரு சாதனையாகும்’’ என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் கரவெட்டி இராச கிராம மக்களால் உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கத்திற்கு அளிக்கப்பட்டபாராட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். இப் பாராட்டு விழா திரு எஸ். ஜெயம் தலைமையில் இராச கிராம சனசமூக நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் உடுப்பிட்டி எம். பி. கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இருந்து இராச கிராமம்வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

### வாழ்க்கையுடன் இணைந்த அரசியல்

‘‘இந்த நாட்டைப் பொறுத்தவரையுல் அரசியல் இல்லாத கருமமே இல்லை என்றே கூறலாம். மக்களின் வாழ்க்கையுடன் இணைந்து இருப்பது அரசியலே. மக்கள் ஒதுக்கப்பட்டாலும் அதில் அரசியல் கலந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது, இன்று சமூகப் பிரச்னை என்பது முற்றாகத் தீர்ந்து விட்டது என்று நாம் கூறவில்லை. பல இடங்களில் பலவிதங்களில் இப்போதும் ஒதுக்கல் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது,. ஆனால் இதைத் தட்டிக்கேட்கும் நிலையில் இன்று ஒரு அரசியல் கட்சியாக விளங்குவது என்று சொன்னால் அது கூட்டணி என்பதையே இங்கு பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

‘‘77ம் ஆண்டுத் தேர்தலின் போது தம்பி இராசலிங்கத்திற்கு எதிராக இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் நின்றார்கள். இவர்கள் ஏன் போட்டிபோட்டார்கள் என்பதை மக்கள் அறியாமல் இருக்கமாட்டார்கள். அந்தத் தேர்தலில்தான் இடதுசாரி எப்படிப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது. சிறுபான்மை மக்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று அவர்கள் சிறுபான்மை என்பதைச் சுட்டிக்காட்டியே தேர்தலில் நின்றார்கள். ஆனால் ஒன்றை மட்டும் கூறவிரும்புகிறேன். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பெறுத அமோக வெற்றியை தம்பி இராசலிங்கம் உடுப்பிட்டியில் நிலைநாட்டினார், அவருக்கு இன்று பாராட்டுவிழா எடுப்பது மிகப் பொருத்தமே. எமக்கு நல்ல அறிவாளியாக ஒருவர் கிடைத்திருக்கிறார் என்பதற்காக நாம் அவரைப் பாராட்டாதிருக்கமுடியாது.

### ஒற்றுமையைக் குலைக்காதீர்

‘‘நாம் 77ல் ஏற்படுத்திய ஒற்றுமையைக் குலைப்பதற்கு சிலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள், இதற்கு தமிழ் மக்கள் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. எம்மிடையே உள்ள ஒற்றுமையைக் கண்டே ஜனாதிபதியும் எம்மை அணுகுகிறார். எனவே நாம் கட்டி வளர்த்துவரும் ஒற்றுமையைக் குலைக்க முனையாதீர்.

‘தேர்தல் என்பது; வரும் போகும் ஆனால் நாம் எடுத்த முயற்சியில் மாற்றமில்லாமல் அதை நிறைவேற்றும் பணியிலேயே தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றோம், தேர்தலில் நாம் போட்டியிடாவிட்டால் தமிழ் மக்களின் குரலைப் பிரதிபலிக்க முடியாத கும்பலே நாடாளுமன்றம் செல்லும் என்பதை தமிழ் மக்கள் ‘மறந்துவிடக் கூடாது’—என்று கூறினர்.

### ‘அமிர் பேச்சு

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

‘‘எமது சமுதாயம் சாதி, கல்வி, பொருளாதாரத்தில் ஒரு பகுதியினரை ஒதுக்கித் தள்ளியதால்தான் இன்று நாம் அடிமை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறோம். தந்தை செல்வா சாதியை ஒழிக்குமட்டும் தமிழ் இனத்திற்கு விமோசனம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். எமது இனத்திற்குள் ஒரு பகுதியினரைச் சுதந்திர மற்றவர்களாக வைத்திருக்கும் மட்டும் எமக்குச் சுதந்திரமே கிடையாது. இதனை உணர்ந்த நாம பின்தங்கிய சமூகங்களையும், பகுதிகளையும் முன்னேற்றுவதில் ஈடுபட்டு வருகின்றோம்

### கூட்டணி சாதித்த பெருமை

‘யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்களில் திரு. இராசேந்திரம், திரு. நடேசு ஆகிய இருவரும் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பது எந்த இடதுசாரிக் கட்சிகளும் இதுவரை சாதிக்க முன்வராத ஒரு செயலாகும். சாதாரண சீவல் தொழிலாளியான திரு. நடேசுவை மக்கள் பிரதிநிதியாக மாற்றியது தமிழர் விடுதலைக் கூட்டணியே.

’சிறுபான்மை சமூகத்தவர்களை உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்க வேண்டும் என்று நாம் முயற்சி மேற்கொண்டு வருகின்றோம் இதன் மூலம் எல்லோரும் அவர்களை ‘ஐயா’ என்று அழைக்கக் கூடிய நிலை உருவாகும் சாதி என்ற மூல வேரைக் களைந்து எறியலாம்

‘இனக்கலவரங்களின் போது தமிழர்கள் அடிவாங்கினார்கள், தாக்குண்டார்கள். சிங்களவர் அடிக்கும்போது உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று பார்த்தா தாக்கினார்கள். ‘பறைத் தமிழா’ என்று சொல்லியே அடித்தார்கள். இவற்றை நாம் உணர்ந்து எல்லோரும் தமிழரே என்ற உணர்வுடன் வாழவேண்டும்.

### தேர்தல் எப்போது

தேர்தல் எப்போது வரும் என்று எவருக்கும் தெரியாது? இந்த வருடம்வருமோ அடுத்த வருடம் வருமோ அல்லது தேர்தல் நடக்குமா என்பது தெரியாது. நாம் மக்களின் பிரச்னைகளை நேரில் அறியவே மக்களிடம் செல்கின்றோம். நாம் கிராம யாத்திரைசெய்த போது மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலுக்காக வருகிறோம் என்று சொன்னார்கள். நாம் மக்கள் முன்வரும்போது சிலர் பொய்ப் பிரசாரங்களைச் செய்கிறார்கள்.

‘சில தம்பிமார் தேர்தலைப் பகிஷ்கரித்தால் உரிமை கிடைத்துவிடுமென்று கூறுகின்றனர். தேர்தலைப் பகிஷ்கரித்தால் எமது தமிழினமே பாதிக்கப்படும் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

’நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும், யு. என். பி யுடனும் இணைந்து இயங்குவதாக இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் வடமராட்சியில் மே தினத்தில் வைத்துக் கூறியுள்ளார். ஆனால் மந்திரிப் பதவிககாக சிறிமாவின்சேலைத்தலைப்பைபிடித்துக் கொள்கையைவிட்ட வர்கள் தாம்தான் என்பதை அவர்கள் மறந்துவிட்டாகள் போலும்! இவர்கள் இதுவரை சிறுபான்மைத் தமிழ் மக்களுக்காக உருப்படியாக ஏதாவது செய்திருக்கிறார்களா?

‘‘இம்மாதிரிக் கிராம இரண்டாம் கட்ட வேலைகள் பற்றி இங்கே சுட்டிக்காட்டப்பட்டது. இதுபற்றி நாம் பிரதமரிடம் கதைத்து வேண்டிய ஒழுங்குகளைச் செய்வோம்’’ என்றார்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினார்கள். உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பாராட்டுவிழாவிற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

---

# சுவாமி பூவளவன் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்

தமிழ்நாட்டு ஆத்மீகசங்கத் தலைவர் சுவாமி பூவளவன் ஆத்மீக பாதயாத்திரை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ். முதல்வர் இ. விசுவநாதன் தலைமையில் ஆரம்பமானபோது யாழ். திருமுறை மன்றத்தின் காப்பாளர் சிவதர்ம வள்ளல் கனகராஜாவும் யாழ். திருமுறை மன்ற அன்பர்களும் சுவாமிகளுடன் சிலதூரம் தொடர்ந்து பாதயாத்திரை சென்று சுவாமிகளுக்கு மாலைசூட்டி ஆதரவு தெரிவித்தார்கள்.

---

# கொத்தணிப் பாடசாலை அமைப்பு: பரீட்சார்த்தமாக அமுலுக்கு வந்தது

[கிளிநொச்சி]

கொத்தணிப் பாடசாலை முறை யாழ். மாவட்டத்தில் புங்குடுதீவிலும், கிளிநொச்சியிலும் பரீட்சார்த்தமானமுறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மகாவித்தியாலயமும், கிளிநொச்சி மகாவித்தியாலயமும இவ்விரு கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவு மூலாதாரப் பாடசாலை அதிபராக புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு, கே குகதாஸன் தற்காலிகமாகவும், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். சின்னத்தம்பி, கிளிநொச்சி மூலாதாரப் பாடாாலை அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். புங்குடுதீவில் 15 பாடசாலைகளும், கிளிநொச்சியில 7 பாடசாலைகளும் கொத்தணி அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்அமைப்புக்கள் சம்பந்தமான ஆலோசனைச் சபையும் நியமிக்கப்பட்டுள்ளது.

---

# ஆசிரியர் இல்லை; ஆனால் வரவில் பதிவு!

(கரவெட்டி)

கல்வி அமைச்சு அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் விஜயத்தில் பருத்தித்துறை கல்வி வட்டாரத்திலுள்ள மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை சிக்கிக் கொண்டது.

வடமாநிலக் கல்வி அதிபதி திரு. கே. சிவநாதன் தலைமையில் சென்ற இத் திடீர் பரிசோதனைக்குழுவில் கல்வி அமைச்சைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர் திரு. ஸ்ரேர்லின் பெரேரா, பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். டபிள்யூ சில்வா, வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கருணநாயக்க. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி டபிள்யூ. எச், சமரநாயக்க ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இப்பரிசோதனைக் குழுவினர் பிரஸ்தாபபாடசாலைக்குச் சென்றபோது அப் பாடசாலை உரிய நேரத்திற்கு ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன். ஆசிரியர் இன்றி வரவு பதியப்பட்டும் மாணவர் வரவு பதியப் படாதிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப பாடசாலை அதிபர் கடுமையானஎச்சரிக்கை செய்யப்பட்டார்.

---

# முன்னாள் பிரதிப்பிரதமர் விடுதலை

டாக்கா, மே. 9.

பங்களாதேஷ் முன்னாள் பிரதி பிரதமர் ஜமால்தீனை இராணுவ நீதிமன்றம் விடுதலை செய்தது.

இவர் முன்னர் அமைச்சராக இருந்தபோது ஊழலில் ஈடுபட்டதாகவும் மோசடி செய்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இவருடன் சேர்த்து குற்றம் சாட்டப்பட்டிருந்த மற்றும் 11 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர் மற்றொரு ஊழல் குற்றச்சாட்டு விசாரணையை எதிர் நோக்கவேண்டியிருக்கிறது. (க)

---

# விசாரணைக்குழு நியமனம்

கோயம்புத்தூர் மே, 9

கோயம்பத்தூரில் ஜூலை 23 ல் பத்திரிகைக் காரியாலயங்கள் தாக்கப்பட்டது குறித்து விசாரணை செய்ய நீதிபதி திரு. பி. வேணுகோபால் தலைமையில் விசாரணைக் குழுவொன்றை தமிழ் நாடு அரசு நியமித்துள்ளது. (கு)

---

# குற்றச்செயல்கள் சீனாவில் அதிகரிப்பு

ஹாங்கொங், மே 9

பீக்கிங், ஷாங்காய், வூஹான், கண்டோன் போன்ற பெரிய சீன நகரங்களில் இரவில் வெளியே செல்வது ஆபத்சாகி வருகிறது என்றும் இரவு வேலைக்குச் செல்வோர் விசேஷ பாதுகாப்புக் கோருகின்றனர் என்றும் பகல் வேளையில்கூட பிரபல்யம் வாய்ந்த பீக்கிங் பூங்காவுக்குள் செல்வது பாதுகாப்பாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

சீனாவின் ஐம்பெரும் நகரங்களான பீக்கிங், தியான்கின், ஷங்காய், கண்டோன், வூஹான் நகரங்களின்பொலிஸ் பிரதிநிதிகளின் கூட்டமொன்றில் இந்நகரங்களில் குற்றத் தடுப்பு பொதுஜன பாதுகாப்பு முற்றாகத் தீர்க்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டது.

ஜப்பானியப்பத்திரிகையான ‘‘ஷங்கேய் ஷிம்பன்’’ பிரசுரித்துள்ள புள்ளிவிபரங்களின்படி 1982-ம் ஆண்டு மூன்று மாத காலத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட மரண தண்டனைகளின் தொகை 116. இதில் 102 பகிரங்கமாக நிறைவேற்றப்பட்டது. ‘‘பீக்கிங் ரிவியூ’’ செய்தியின்படி 1977 — 1981 காலகட்டத்தில் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிகளில் பெருவாரியானோர் 25 வயதுக்கும் கீழ்ப் பட்டவாகளாவர். குற்றப் பெருக்கம் காரணமாக பீக்கிங் நகருக்கு அபகீர்த்தி ஏற்பட வேண்டுமா என்று இச்சஞ்சிகை எழுதியுள்ளது.

தனியார் ரயில்வே பொதுஜன பந்தோபஸ்து ஏஜன்சியையில் சிக்குபவர்களில் 80 சதவிகிதமானோர் வாலிபர்களாவர். நகர குற்றவாளிகளில் 70 சத விகிதமானோர் இளம் ஆண்களும் பெண்களுமாவர். வூஹான் நகரில் 3400 பேர்களைக் கொண்ட 624 கோஷ்டிகளை நிர்வாகம் கட்டுப்படுத்தி விட்டது என்று ‘‘ரென்மின் ரிபாவோ’’ எழுதியுள்ளது.

---

# அமெரிக்க ஜப்பானிய இராணுவச் செலவு அதிகரிக்கப்படும்?

ஜாகர்த்தா, மே 9

‘‘ஜப்பானின் ‘சுய தற்காப்புப் படை’களின் நடவடிக்கைகளை பத்து மடங்சாக விஸ்தரிக்கவும், அதன் இராணுவச் செலவை அதிகரிக்கவும், ஜப்பானிய அரசாங்கத்தை இணங்க வைப்பதே அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் வைன்பேர்கரின் சமீபத்திய டோக்கியோ விஜயத்தின் நோக்கமாகும்’’ என்று இந்தோனேஷிய செய்தி நிறுவனமான ‘பாப்’ கருத்து வெளியிட்டுள்ளது

‘‘ஜப்பானியத் துருப்புகள், ஸாக்ஹலின் கரைகளிலிருந்து இந்தோனேஷியாவின் காலிமன்தான் கரைவரை செயல்ப்படத் தயாராக இருக்கவேண்டும் என்று வாஷிங்டன் எதிர் பார்ப்பதாகத் தெரிகிறது’’ என்றும் இந்தச் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில் குறிப்படுகிறது.

---

# தீ விபத்து: குழந்தை பலி!

சென்னை மே 9

சென்னை அபிராமி புரத்தில் நேற்றுக் காலை நடந்த தீவிபத்தில், இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று எரிந்து சாம்பலானது. 14 குடிசைகள் தீக்கிரையாகின. (க)

---

# திருத்த நடவடிக்கை

[சுழிபுரம்]

சுழிபுரம் திருவடிநிலையில் அமைந்துள்ள சுடலை மடத்தின் அவல நிலமையைச் சுட்டிக்காட்டி ஒரு செய்தி ‘ஈழநாடு’ பத்திரிகையில் வெளியாகியதைத் தொடர்ந்து சுழிபுரம் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினர் கட்டிடத்தை திருத்திக் கட்டுவதற்கு எண்ணாயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தை திரட்டியுள்ளனர். உடனடியாக கட்டிட வேலைகளை மேற்கொள்ள இவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# நாட்டுவிடுதலை - மக்கள்விடுதலையை அடிநாதமாகக் கொண்டவன் பாரதி

## நூற்றுண்டு விழாவில் 'தருமர்'

### யாழ். அபிவிருத்திசபையில் விரைவில் வேலைவங்கி

(அரியாலை)

''பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியா பூரண விடுதலை பெற்று சுதந்திர பூமியாக விளங்க முயற்சி எடுத்த காலத்தில்தான் மக்கள்மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்திய மகாகவி பரரதியார் தோன்றினுர். பாரதியார் எழுதிய நூல்கள், பாடல்கள் பாமர மக்களும் படித்து இன்புறக்கூடிய வகையில் அமைந்திருந்ததினுல் பாரதி மக்கள் கவியாக மதிக்கப்படுகிறுர்''

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கம் ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதிநூற்றுண்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ச. அப்டையா தலைமையில் நடைபெற்ற பாரதி நூற்றுண்டு விழாவில் எம்.பி. வி. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் பாரதியை தமது விடுதலை வீரன் என்று போற்றுகிறுர்கள். மக்கள் மத்தியில் சோசலிஷ சமுதாயம் அமைய வேண்டுமென்று விரும்பிய பாரதியின் காலத்திலேதான் ருஷ்யா புரட்சியில் ஜார் மன்னனின் ஆட்சி முற்றுப்பெற்று மக்களின் சோஷலிஷ ஆட்சி மலர்ந்தது. ருஷ்யாவின் சோசலிஷ் ஆட்சியை முதன் முதல் வாழ்த்திப் பாடல்கள் யாத்த முதலாவது புலவனுகவும் பாரதி விளங்கினுன். பாரதி மக்கள் மனதில் நிலை கொண்டிருக்கிறுர் எத்தனை நூற்றுண்டுகள் சென்றுலும் பாரதியை மக்கள் மனதிலிருந்து அகற்றவோ, அப்புறப்படுத்தவோ முடியாது. பாரதியைப்போன்ற கவி விற்பன்னர்கள் காலத்துக்குக்காலம் தோன்றுபவர்களல்ல. யுகத்துக்கு யுகம்தோன்றுபவர்களாவர். இளங்கோ தோன்றி தமிழ் வளர்த்தான். அதனைத்தொடர்ந்து கம்பன் தோன்றி காவியம் வளர்த்தான். பத்தொன்பதாம் நூற்றுண்டிலே மக்கள் கவி பாரதி தோன்றி விடுதலையுணர்வையும், மக்களின் சுதந்திரஉணர்வையும் கட்டி வளர்த்தார். நாட்டு விடுதலையையும், மக்கள் விடுதலையையும் தனது அடிநாதமாகக் கொண்டார். சுதந்திர உணர்வை மக்கள் மனதில் தோன்றச் செய்து நாட்டு விடுதலைபெற வழி வகுத்தார்'' என்று குறிப்பிட்டார்.

### யாழ்- அரச அதிபர் பேச்சு

''யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா பேசுகையில் கூறியதாவது: ''பாலர்களின் கோலாட்டம், கும்மி நடனத்துடன் மிகச் சிறந்த முறையில் பாரதி நூற்றுண்டு விழாவை நீங்கள் கொண்டாடுவது பாராட்டுக்குரியதாகும். இங்கு வந்தவுடன் பல கோரிக்கைகள் என்னிடம் விடுக்கப்பட்டன. வேலையில்லாப் பிரச்னை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் பரவலாக இருக்கிறது. இதனை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை ஏற்பட்டதின் பின்னர் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கியுள்ளோம். இப்பொழுது வேலை வழங்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே இருக்கிறது இப் பொறுப்புக்களை விரைவில் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு வழங்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்து வருகிறது. அவரவர் தராதரத்துக்கும், திறமைக்கும் ஏற்ப வேலைவாய்ப்புக்களை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம். சிற்றூழியர் பதவிகளுக்கு சிபார்சு செய்யும் பொறுப்பு அவ்வப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களிடத்தில் இருக்கும். தகுதியான பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கும் பொறுப்பை யாழ்—மாவட்ட அபிவிருத்திசபை கொண்டிருக்கும். இந்த முடிவை அபிவிருத்திசபையில் எதிர்க்கட்சித் தலைவரும், ஏனைய பாராளுமன்றஉறுப்பினர்களும் செய்ய முன்வந்திருக்கிறுர்கள். வட பகுதியில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களுச்கு வேலைவாய்ப்பில் கணிசமான அளவை வழங்க வேண்டுமென்று மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும் முடிவு செய்திருக்கிறுர்கள். இவர்களின் முடிவின்படி இனிமேல் உங்களைப்போன்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்புக்களில் விசேட சலுகைகள் வழங்கப்படவிருக்கிறது இச் சலுகைகள் மூலம் அநேக படித்த வாலிபர்களுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

''அபிவிருத்தி சபையில்நாம் ஒரு வேலை வங்கியொன்றையும் அமைக்க யோசித்துள்ளோம் இதற்கு விண்ணப்பம் செய்வதற்கான அறிவித்தல் கூடிய விரைவில் பத்திரிகை விளம்பரம் மூலம் வெளியிடவிருக்கிறேம் வேலை வாய்ப்பில் தகுதியும் திறமைக்குமே முதலிடம் வழங்கப்படும். ஆனுல் அதே நேரத்தில் பின் தங்கிய மக்களுக்கு அதில் சில சலுகைகள் வழங்கப்படும். காணி சம்பந்தமாக கோரிக்கை விடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் நானும். மாவட்டஅபிவிருத்தி சபைத்தலைவரும் இப்பகுதிக்கு விஜயம் செய்து இப் பிரச்னையை நேரில் பார்வையிட்டு இதற்கு ஆவன செய்து தீருவோம்'' என்று குறிப்பிட்டார்.

### மகஜர் கையளிப்பு

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்றத்தினதும், சனசமூக நிலையத்தினதும் சார்பில் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நிலையத்தின் சார்பில் திரு. பொ. கனகரத்தினம் அரசாங்க அதிபரிடம் கையளித்தார்.

''பாரதி கண்ட பாவலரும், மாதரும் என்றதலைப்பில் பண்டிதர் க. இராசையா பேசுகையில், ''எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளப்போகின்ற சிற்பிகளை உருவாக்கும் பொறுப்பு தாய்மாருடையதாகும். இதனை பாரதி நூற்றுண்டுவிழாவில் தாய்மார்கள் மனதில் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்.

### ''நாடும் இனமும் விடுதலை பெற''

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

''பாரதி இந்தியாவில் சிறு கிராமத்தில் பிறந்தாலும் அன்றிருந்த சூழல் வேறுபட்டதல்ல. மக்களிடையே மண்டிக் கிடந்த ஏற்றத்தாழ்வுகளை அகற்றவும், ஏகாதிபத்தியச் சுரண்டலிலிருந்து நாட்டை மீட்டு எடுக்கவும் பாரதி சுதந்திர தாகத்தை மக்களிடையே வளர்த்தார். சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும், நாட்டையும், நாட்டு மக்களையும் விழித்தெழச் செய்யவும் பாரதி உழைத்தார். சமுதாய விடுதலையா? தேசிய விடுதலையா? பொருளாதார விடுதலையா? இதில் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதிலிருந்து வேறுபட்டவராக மூன்றையும் ஒரே குரலில் கேட்டார். சமூகம் விடுதலை அடையாமல் இனம் விடுதலை அடைய முடியாது என்ற கருத்தைக் கொண்டவராகப் பாரதி விளங்கினுர். சமூகத்தில் புரையோடியிருந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட பாரதி அந்நிய ஏகாதிபத்தியச் சுரண்டலிலிருந்தும் நாட்டை விடுதலை பெறச் செய்யவேண்டும் என்றும், அநியாயத்தையும், அக்கிரமத்தையும் கண்டு அழுவதும், அஞ்சுவதும், மரத்துக்குச் சமனுன செய்கையாகும். என்று எண்ணிய பாரதி: அதற்கு எதிராக மக்கள் போராடவேண்டும் என்று கோருகிறுர். சமுதாயமும், இனமும், சர்வதேச அநியாயத்தை எதிர்த்துப் போராடி நாடும், இனமும்,சமுதாயமும் விடுதலைபெறவேண்டும் என்ற கருத்துள்ளவராக பாரதி வாழ்ந்தார். பாரதி மக்கள் கவிஞன் மட்டுமல்ல, மக்களின் சுதந்திர நாதமாகவும் விளங்கி அடிமைத்தளையை அறுத்து நாடும், இனமும் பூரண விடுதலை பெறவேண்டுமென்று தனது இறுதி மூச்சுவரை உழைத்துவந்தார் என்று குறிப்பிட்டார்.


(25)

1957-1982

31%

சிறந்த பண விருத்தி ஸ்தாபனம் ஒன்றில் முதலிடுசெய்வது உங்கள் நோக்கமானுல் இருபத்தைந்து வருடங்களாக முழுமையான பாதுகாப்பும் கவர்ச்சிமிகு தேட்டமும் இணையிலா அரணும் அளிப்பது

தி சென்றல் பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்

| காலவரை | தொகை | வருடாந்த வட்டி மாதாந்தக் கொடுப்பனவு | வருடாந்தக் கொடுப்பனவு | முடிவு காலக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| 2 வருடங்கள் | ரூபா200,000/-— மேல் | 27 % | 29% | 31% |
| 2 வருடங்கள் | ரூபா 100,000/- [200,000/= | 24% | 27% | 30% |
| 2 வருடங்கள் | ரூபா500/- —100,000/- | 22% | 25% | 27% |
| 1 வருடம் | | 20% | | 22% |
| 6 மாதங்கள் | | | | 17% |
| 3 மாதங்கள் | | | | 15% |

இயக்குநர்:— சி. விஜயனுயக்க (சபாநாயகர்—நிர்வாக இயக்குநர்)

ஏ. எஸ். கருணுரட்ண ஜே. பி., சட்டத்தரணி, ரி. ஏ. துனுவில ஓ. பி.ஈ., சட்டத்தரணி, எம். சி. சன்சோனி பி. ஏ., இளைப்பாறிய பிரதம நீதியரசர், ரி.எம்.துனுவில பி. ஏ., கர்னல் ஈ. ஜே. டிவிதோட்டவெல, கர்னல் ஏ. ரி. நுகவெல.

முக்கிய வர்த்தகத்துறைகள்:

பணக்கையாள்கை, காணி அபிவிருத்தி, இறக்குமதி, பிரதிநிதித்துவம் விநியோகம்.

| பொருளாதார நிலை பற்றிய தகவல்: - | 1978/79 | 1979/80 | 1980/81 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| முதலும் ஒதுக்கிய முதலும் | 8,552,725 | 10,295,286 | 15,929,184 |
| மொத்த நிதியம் | 46,198,309 | 55,703,505 | 84,142,840 |
| அசல் லாபம் (வரி கட்டிய பின்,) | 1,775,842 | 2,135,945 | 6,090,648 |
| பங்கு லாபம் | (24%) | (27%) | (30%) |

தி சென்றல் பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்.

தலைமை அலுவலகம்; 24, தலதா வீதி, கண்டி போன்: 4098, 3818, 3076.

நகர் அலுவலகம்: (நிர்வாகம் ஃபோர்ப்ஸ் அன் வாக்கர் லிமிட்டெட்) நம்பர் 221/5, தர்மபால மாவத்த, கொழும்பு-7. போன்: 93792

கிளை அலுவலகம்: 250, கே. கே. எஸ். வீதி, சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம். போன்: 8360


## தங்கச்சங்கிலி திருட்டு: பெண்ணுக்கு றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

தங்கச்சங்கிலி திருட்டுத் தொடர்பாக கைதான பெண் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்

மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் தேர்த்திருவிழாவன்று தங்கச்சங்கிலி திருடியதாக சந்தேகத்தின்பேரில் மாதகல் பஸ் நிலையத்தில் வைத்துக் கைதான முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த ஆறுமுகம், இராஜேஸ்வரி என்னும் இளம் யுவதியை காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## கட்டைக்காடு கொலைவழக்கு:

## துப்பாக்கிச் சன்னங்கள் காணப்படவில்லை

(சாவகச்சேரி)

''சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பொழுது துப்பாக்கிச்சூட்டுச் சன்னங்கள் பட்ட அடையாளங்கள் எதுவும் தென்படவில்லை சுவர்களிலேயும் சன்னங்கள்பாய்ந்த அடையாளங்கள் இருந்திருக்கவில்லை. நான் இன்னெரு மரணவிசாரணைக்குச் சென்றதால் ஆனந்த என்பவர் விசாரணைக்குச் சென்றுர். முதல் முறைப்பாட்டிலேயே ஈசுவரி என்பவர் தான் தகவல் கொடுத்தார். ஈசுவரி என்பவர்தான் இவ்வழக்கில் சாட்சியமளித்த இராசேஸ்வரி என்பவராகும்''

கட்டைக்காடு கொலைவழக்கில் சாட்சியமளித்த நீர்கொழும்பு பொலிஸ் சார்ஜன்ட்டும் சம்பவகாலம் பளையில் கடமையாற்றியவருமான கே. எம். ஏ. பிரேமரத்தின மேற்கண்டவாறு கூறினர்.

முருகர் சின்னையா என்பவரை அவ்வூரை சேர்ந்த சண்முகநாதன், சிவானந்தன் என்பவர்கள் துவக்கால் சுட்டுக் கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளிசார்பில் சார்ஜன் செல்லையாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வ. செல்லத்தம்பி சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாய என்பவர்களும் ஆஜராகினர்.

தொடர்ந்து சார்ஜன்பிரேமரத்தின சாட்சியமளிக்கையில் கூறியதாவது 1-ம்எதிரி 1980ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி கைது செய்தோம். விஜயசிறி என்பவர்தான் கைது செய்தார் சம்பவ இடத்திற்கு நானும் சூரியப்பிரகாசமும், குணபாலன் என்பவரும் சென்றேம் நாம் அங்கு ஓர்பிரதியேக வாகனமொன்றிற்சென்றேம்''

குறுக்குவிசாரணை நடைபெற்றபின்னர் அடுத்தமாதம் 12-ம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# "பதவிவேண்டாம் ஒத்துழைக்கச் சம்மதம்"

(யாழ்ப்பாணம்)

''பல வருடங்களாக நட்டத்திலும், கஷ்டத்திலும் இயங்கி வந்த இச்சங்கம் சமீப காலமாக நல்லநிலையில்இயங்குகின்றது. இத்தகைய நிலையில் இதனை வளர்க்கவும், அதனை பலர் வாழவும் நாம் உறுதுணை புரிய வேண்டும். அதற்கு நான் என்றும் ஒத்துழைப்பை வழங்குவேன்.

இரணைமடு கிழக்கு ப. நோ. கூ, சங்கத்தைச் சேர்ந்த திரு. இ கிருஷ்ணராசா அண்மையில் கிளிநொச்சி ப. நோ. கூ. சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இடம் பெற்ற புதிய நெறியாளர் குழுத்தெரிவில் சிலர் அவரைத் தலைவராகத் தெரிவு செய்ய முற்பிட்ட போது அவர் அதற்கு மறுத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் 'நான் இங்கு இயக்குநர் [சபை உறுப்பினராக வரவேண்டு மென்று வரவில்லை. நானே, எனது கிளையினரோ' இயக்குநர் சபை உறுப்பினர் பதவி கோரவும் மாட்டோம். இயக்குநர்சபை உறுப்பினராக இருக்க நேர்மையானவர்களை தெரிவுசெய்யுங்கள். அவர்களது நடவடிக்கையில்தான் சங்கத்தின் வளர்ச்சியுள்ளது'' என்றார்.

இதையடுத்து தற்போதைய தலைவரான திரு. பொ. பாக்கியநாதன் மீண்டும் தலைவரானார், ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. ப. குணரத்தினம் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். [கி]

## கிண்ணியாவிலுள்ள

# சுடுதண்ணீர் கிணறுகள் மீண்டும் பாவனையில்!

(திருகோணமலை)

கிண்ணியாவிலுள்ள ஏழு சுடுதண்ணீர்க் கிணறுகளும் மீண்டும் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

பாவிக்கப்பட்ட நீர் வெளியில் செல்லக்கூடிய முறையில் இப்பொழு திருத்தியமைக்கப் பட்டுள்ளது.

உரிய நிர்வாகத்திடமிருந்து மேலும் பணம் கிடைத்த பின்னர் மற்றும் புனரமைப்பு வேலைகள் நடைபெற விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட அமைச்சர் திரு. பி. நெல்சன், திருகோணமலை எம். பி. திரு. ஆர், சம்பந்தன், திருகோணமலை மாவட்டசபைத் தலைவர் திரு. எ. தங்கத்துரை, அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ ஆகியோர்இப் புனரமைப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (கு)

## சில்லாலை றே. க மகாவித்தியாலய

# 10 வருடக் குறை அடுத்தவாரம் தீர்க்கப்படும்

[பண்டத்தரிப்பு]

சில்லாலை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலத்தில் கடந்த 10 வருடங்களாக விஞ்ஞான ஆசிரியர் எவரும் இல்லாத குறைபாட்டை நீக்குமுகமாக விரைவில் விஞ்ஞான ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கைமேற்கொள்வதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கதூதுக்குழுவினரிடம் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் உறுதியளித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் அடுத்தவாரம் 50 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாகவும், அதில் ஒருவரை மேற்படி வித்தியாலயத்திற்கு நியமனம்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுவதாகவும் சங்கக்குழுவினரிடம் திரு. சிவநாதன் தெரிவித்தார்.

வடமாநில கல்விப்பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் வித்தியாலய அதிபர் சங். சகோதரி மேரி கொன்ஸ்ரன்ரைன், அபிவிருத்திச் சங்கச் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி, சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. ஜெபநேசன் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டு வித்தியாலயத்தின் ஏனைய தேவைகள் பற்றியும் எடுத்துக் கூறினர்.

# பெண்மீது ஆசைகொண்டவருக்கு ஏற்பட்ட விபரீதம்!

[அம்பலாங்கொடை]

தன்னைக்கற்பழித்தவரை கத்தியால் குத்திகொலைசெய்தார் ஒரு பெண்! இச்சம்பவம் அம்பலாங்கொடைப் பகுதியில் உள்ள எகொடமுல்ல அருன்கல என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

இதுதொடர்பாக பலம்பலப்பிட்டி நீதவான் முன் நடைபெற்ற மரண விசாரணையில் தெரியவருவதாவது;—

சம்பந்தப்பட்ட பெண் வெளியே சென்று விட்டு வீட்டுக்குத்திரும்பிய போது அறையின்ஒருமூலையில் சிறிவர்த்தன ரத்தனசிறி (வயது—24 கையில் ஒரு சிறிய துப்பாக்கியுடன் இருப்பதைக் கண்டாராம், இப்பெண்ணைப் பயமுறுத்தி கற்பழித்த பின்னர் பெண்ணின் பக்கத்தில் உறங்கிவிட்டாராம் அப்பொழுது அப்பெண், சிறிய கத்தியினால் சிறிவர்த்தனவின் கழுத்தை வெட்டிய பின்னர் பலமுறை அவர் இறக்கும்வரை கத்தியால் குத்தினராம்.

இப்பெண் வீதியில் போய் வரும் போதெல்லாம் மரணமானவர் கிண்டல் செய்த போதிலும் அது பற்றி யாரிடமும் கூறாது அப்பெண் இருந்து விட்டதாகவும் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

மரணமானவரை இப்பெண்ணின கணவர் ஒரு முறை கத்தியால் வெட்டியதாகவும் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட மனஸ்தாபத்தில் இரு பிள்ளைகளையும் கணவர் கூட்டிச் சென்று விட்டதாகவும் இப்பெண்ணின் செலவுக்கு காசு அனுப்பிவருவதாகவும் இப்பெண் தனிமையில் வசித்து வருவதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. (கு)

## கார்-சைக்கிள்

# விபத்தில் அதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

கார்—சைக்கிள் விபத்தில் காயமடைந்த கா. ஜெயராஜா, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தொண்டமானாறு மகா வித்தியாலய அதிபரான திரு. கா. ஜெயராஜா சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மேற்படி விபத்துக்குள்ளானார். இச்சம்பவம் யாழ். நகரில் நிகழ்ந்தது.

அவசர சத்திர சிகிச்சைக்குள்ளான இவர் குணமடைந்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழர் அரசியல் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவர்

[அமரர் செல்லத்துரைக்கு இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அஞ்சலி தெரிவிக்கப்படுவதை யொட்டி இக்கட்டுரை இடம் பெறுகிறது.]

1948—49களில்யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கில வாலிபர்கள், இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம்என்று ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு யாழ்ப்பாணப் பட்டினத்தில் நடைபெறும் அதன் கூட்டங்களுக்கு அச்சுவேலியிலுள்ள நாவற்காடு என்னும் தனது கிராமத்திலிருந்து செல்லத்துரை தவறாமல் வருவார். ஒரு டயறிப்புத்தகத்துக்குள் பத்திரிகை மடிப்புகளும். துண்டுதுணுக்குகளும், அந்த ஸ்தாபனம சம்பந்தப்பட்ட சுடிதங்கள். குறிப்புகளையும் பருமனாக நிறைத்துக்கொண்டு வரும் அவரே அந்த ஸ்தாபனத்தின் செயலாளருமாய் இருந்தார்.

தராதரப்பத்திர ஆசிரியரான அவர் உள்ளூரில் வேலை கிடைக்காததாலோ, அல்லது வெளியூரில் ஒன்றிரண்டு மாதம் வேலை செய்து அதை விடுத்துத் திரும்பி வந்ததாலோ பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டு ஏதாவது எழுதி அனுப்பிக் கொண்டிருந்தது மாதிரிச் சாயல். ஈழகேசரிப்பத்திரிகைக்கு நிச்சயம் எழுதிக்கொண்டிருந்தார், செய்திகளும் இலக்கியக் குறிப்புகளும் இவற்றுடன், புத்தக விமர்சனங்களும், 'இளவரசு' என்ற பெயரில் எழுத்தாளர் பலரைப்பற்றி அறிமுகம் செய்தலும் பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.)தமிழ்ப்பண்ணை, கோ. இராமசுவாமியுடன் நிறையத் தொடர்பு நிறையப் புத்தகங்கள் பத்திரிகைகள் வாங்குவார்; படிப்பார்.

இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத்தில் இடதுசாரி மனப்போக்குக் கொண்டவாலிபர்களே அதிகம் அவர்களுக்கும், நாஸ்திகம், பகுத்தறிவுக்கருத்துக்களோடு இன-மத மொழிப்பற்றுக் கொண்ட செல்லத்துரைக்கு மிடையில் முரண்பாடுகள் கிராமத்திலிருந்து வந்த செல்லத்துரை, பட்டினத்தில் சுயாதீனமாக ஒருகடையில் நுழைந்து தேநீர் குடிக்கத் தயங்கிக் கொண்டிருக்க மற்றவர்கள் நிர்ப்பயமாக இழுத்துச் செல்வார்கள் அந்தக்காலங்களில்தான் அவர் வீரகேசரியின் அச்சுவேலி நிருபரானார்.

வெகுவிரைவிலேயே செய்தி வேட்டைச் செல்லத்துரை' என்று அவரது நண்பர்களால் அழைக்கப்பெற்ற செல்லத்துரை, உண்மையில் செய்தி மன்னன் ஆகவல்ல ஒரு ஜாம்பவான் ஆகவே கணிக்கப்பட்டார். ஒரு நிகழ்ச்சி. ஒரு மாநாடு, ஒரு முக்கிய பிரச்னை, ஒரு அரசியல் இழுபறி எதுவாயிருந்தாலும், அதன் நாடி நரம்புகளை வெகு சுளுவாய் உருவி எடுத்துக் கொண்டுபோய், வெகு சாவதானமாய் உட்கார்ந்து வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு எழுதி அனுப்பிவிடுவார். கூட்டங்களுக்குப்போய் அங்கு உட்கார்ந்து குறிப்பெடுக்க மாட்டார். ஒரு சுற்றுச் சுற்றி, கூட்டத்தின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, சுண்டு விரலிலே செய்தியைக் கொண்டு வந்து தயாரித்துவிடுவார் எல்லாம் தத்ரூபமாக இருக்கும்.

அவர் ஒரு நிருபராகவலல் ஒரு செய்தி ஸ்தாபனமாகவே இருந்தார் மெயில் வண்டியில் செய்திகளைத் தள்ளுவதற்காக அவர், அவசர அவசரமாக எழுதிக்கொண்டிருக்கையில், சகோதரப் பத்திரிகை நிருபர்கள் தாம் சேகரிக்கத் தவறியதும். தம்கைக்குப்பிடிபடாததுமான செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக நேரிலும், தொலைபேசியிலும் அவரைச் சுற்றி வளைப்பார்கள். ஒரு அநாயாசமான ஒரு கர்வத்தோடு அவர்களுக்கு அச்செய்திகளிச் ஏதாவது துண்டு துணுக்குகளைவீசிக்கொண்டே எழுதித் தள்ளுவார். அந்த நெருக்கடியில் சில செய்திகளை ஊர்ஜிதம் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட தலைவருடனோ, அதிகாரியுடனோ பேசுவதற்காகத் தொலைபேசியைத் தூக்குவார். அதற்கிடையில் குறுக்கேவரும் ஒரு செய்தியைக் குறித்துக் கொள்ளுவார். நண்பர் ஒருவர் செய்தியோடு வந்தால், அதை வாங்கி வைத்துவிட்டு, 'சரி போய் வாரும்!' என்று அலட்ட நேரமில்லாத நட்புரிமையோடு விரட்டுவார். அல்லது வந்தவர் எழுதக்கூடிய வல்லமையுடையவராயிருந்தால், இரப்பா, இதை ஒரு தப்பா...' என்று வேலையும் கொடுத்து விடுவார்.

செல்லத்துரை வீரகேசரியின் யாழ். நிருபராக கடமையாற்றிலும் ஆற்றல், துரிதம், துணிச்சல், நேர்மை ஆகிய குணங்களால் அவர், வீரகேசரியின் யாழ். பிரதேச ஆசிரியராகவே கணிக்கப்பட்டார்.

அவர் எப்பொழுதும், இன மொழிப்பற்றுள்ளவராகவே இருந்தபடியால், பத்திரிகைத் துறை மூலம் அவர் அதைப் பூரணமாகவே செய்தார் எனலாம், முழுமையாக அவர் ஒரு தலைமுறை காலத்துக்குப் பத்திரிகைத் துறைக்குத் தொண்டாற்றியமையால், இக்காலத்தில் தமிழ்மக்கள் மத்தியில் தோன்றி வளர்ந்துள்ள அரசியல் சிந்தனைகள்—வெளிப்பாடுகள்—எழுச்சிகள் வீழ்ச்சிகள் யாவற்றையும் தன் கையாலேயே பதிவுசெயத பெருமைக்குரியவராவார். இக்காலங்களில் சரியானதும் பிழையற்றதுமான கருத்துக்களைப் பதிவு செய்ததுபோல முரணானதும், நிலையற்றதுமான வாக்குறுதிகளையும், தகிடுதத்தங்களையும் பதிவுசெய்து, காலத்தால் அவற்றின் உண்மை ஸ்வரூபங்களையும் திருப்பிப்பதிவுசெய்தார். எல்லாவிதமான தகவல்களையும் செய்திகளையும்வெளிக்கொணர்ந்து பததிரிகைத் தர்மத்தை நிலைநாட்டினார்.

செய்திகளைக் குறுகத் தறித்தும், திரித்தும், திசைமாற்றியும் கூட எழுதுவார். பத்திரிகைச் செய்திகளிலேயே தங்கி வாழும் சில இயக்கத்தினரின் செய்திகளை அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகச் சுருக்கி அல்லது திரித்து எழுதிவிட்டு ஒருக்கால் கண்டனத்துக்குள்ளாவார். பின் வேறொரு செய்தியை தாராளமாக எழுதி அவர்களைத் திருப்திப் படுத்துவார், வீரகேசரிக்கு எழுதிய செய்தியை, அதே கணத்தில், மித்திரன் வாசகர்களுக்காகப் பரபரப்பூட்டும் நடையில் எழுதுவார்.

தலைவர்களானாலென்ன, தான் தோன்றிகளானாலென்ன முன்னுக்குப்பின் முரணாக நடந்து கொண்டால் செல்லத்துரை 'பொடி'வைத்து விடுவார். ஆசாமியை வழிக்குக் கொண்டுவந்துவிடுவார். ஆனால், எல்லோரும் பத்திரிகைக்காரனின் தயவை எதிர்பார்த்து நின்ற உண்மையை மறைக்கமுடியாது, அறிக்கைகள் மூலம் இயக்கம் நடத்திப் பிழைப்பு நடத்துபவர்களையும் லட்சிய வீரர்களாக வேஷம் போடுபவர்களையும் அவர் இனங்கண்டு வைத்திருந்தார்.

ஆனாலும், தமிழ் மக்களின் விடுதலைக்கான செய்திகளுக்கு முக்கியம் கொடுத்த அளவுக்கு செல்லத்துரை, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கிளர்ச்சி சம்பந்தமான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று பரவலான ஒரு குறைபாடு உண்டு. இது செல்லத்துரையின் இயல்பான இன-மொழிப் பற்றினால் ஏற்பட்டதா அன்றி, தாழ்த்தப்பட்ட மக்களின் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால், தான் பக்கம் சாய்ந்து விட்டதாக மற்றவர்கள் கருதுவார்கள் என்றதாழ்வுச்சிக்கலின்காரணமாகவாஎன்பது தெரியவில்லை, அல்லது பெரும்பான்மைச் சமூகத்தவர்களின் விருப்பத்துக் எதிராக செய்திகள் வெளியிடக்கூடாத 'ஜனநாயகக் கோட்பாடோ' என்னவோ? மாக்ஸீயக் கட்சிகளுடைய செய்திகளை வெளியிடுவதிலும், அவர் இதே கொள்கையைக் கடைப்பிடித்ததையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

எப்படியிருந்த போதிலும், செல்லத்துரை பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய சேவை, தமிழ் மக்களுடைய அரசியல் சமுதாய வாழ்வோடு பின்னிப் பிணைந்த சேவையாகும். அது மகத்தானது நிரந்தரமானது என்பதில் ஐயமில்லை.

என். கே. ரகுநாதன்

## திறமைச் சித்தி

(அரியாலை)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரியும் திருமதி பிரேமாவதி சண்முகம் யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட பட்டப்பின்படிப்பில் டிப்பிளோமா திறமைச்சித்திபெற்று தேர்ச்சி பெற்றுள்ளார்.

# இப்படியும் சம்பவங்கள்

(மாவிட்டபுரம்).

'நான்கு பிள்ளைகளின் தாயாருக்கும், மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட உறவு விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது. நீதிமன்ற அனுமதியை பெற்று அவர்கள் புதிய வாழ்வு தொடங்கியுள்ளனர்.

சங்கானையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த இரரசையா சரவணபவான் என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் செய்த புகாரில் தமது மனைவி சாரதாவை காணவில்லையென்று தெரிவித்திருந்தார்.

பொலிசார் நடத்திய விசாரணைகளையடுத்து மேற்படி பெண் சங்கானையைச் சேர்ந்த பொன்னர் துரைராஜா என்பவருடன் சென்றிருப்பதாக தெரியவரவே இருவரது குடும்பத்தினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்தனர். மேற்படி பெண் 4 பிள்ளைகளுக்கு தாயானவர் என்றும் அவரைக் கடத்திச் சென்ற பொன்னர் துரைராஜா 3 பிள்ளைகளின் தந்தை என்றும் இருவரும் இணைந்து வாழ பொலிசாரின் அனுமதியைக் கோரினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பிள்ளைகளது நலன் கருதி இவ்விருவரையும் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். பிள்ளைகளது விபரங்களைக் கேட்டறிந்த நீதிபதி மேற்படி பெண்ணின் கடைசிப் பிள்ளையை எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டு அவர்கள் இணைந்துவாழ அனுமதி வழங்கினார்.

மூன்ருவது வாரம்
ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30,6.15 9.15
சுதாகர் – ராதிகா
சுவர் இல்லாத
சித்திரங்கள்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜாவீட்டுப்
பிள்ளை
[புதிய பிரதி]

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
சிவாஜி–ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி
பைரவன்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
புதிய பிரதி)
சிவாஜி மகாகவி காளிதாஸ்
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

ராணி தினசரி 10–30, 2–30, 6–15, 9–30
(யாழ். நகர்)
முன்பு காணத் தவறியவர்களுக்கு மீண்டும்
கண்டுகளிக்க கிடைத்த அரிய சந்தர்ப்பம்!
பாக்கியராஜ் - ரதி நடித்த
புதிய வார்ப்புகள்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

RAJAH Daily at 10–30, 2–00, 4–30
7–00 and 9–30
(Jaffna) SHIRLY EATON
FUTURE WOMEN
(Strictly for Adults – Scope Color)
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

# பிரயாணி பஸ்ஸில் மரணம்

[ஊர்காவற்றுறை]

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிவந்த பஸ்சினுள் ஒரு பிரயாணி மரணமானுர். இவரது சடலம் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறந்தவர் கரம்பன் மேற்கை சேர்ந்தவரெனவும் இவருக்கு இருதய வியாதி இருந்ததெனவும் அறியப்படுகின்றது. ஊர்காவற்றுறை பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். [க]

# "சாவித்திரி சரிதம்"

(சங்கானை)

"மனேன்மணி கதையைக் கூறும் நூலை மனேன்மணியம் என்றுபெயரிடப்பட்டதுபோல் கற்பினை உணர்த்தும் இந்நூலை சாவித்திரியம் என்று பெயரிட்டிருந்தால் மிகவும் பொருத்தமாக விருந்திருக்கும் இந்நூலாசிரியர் பாராட்டுக்குரியவர் இந்நூலில் கருத்துக்களுக்கப்பால் பலதத்துவங்கள் போதித்திருக்கின்றன. இந்நூல் ஆசிரியர் இந்நூல் விற்பனையால் கிடைக்கும் ஆதாயத்தை சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய திருப்பணிக்கு வழங்க உள்ளதும் பாராட்டுக்குரிய என்று சாவித்திரி சரிதத்தை சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் திரு. சீ. விஞசித்தம்பி குறிப்பிட்டார்.

வியாசர் வடமொழியில் அருளிய மகாபாரததத்தில் ஓர் உபகதையாகச் சுருக்கமாகக் கூறப்பட்ட சாவித்திரியின் கதையை விரிவானகாவியமாக எழுநூற்றெரு விருத்தப்பாக்களால் புலவர் வே. கனகசபாபதி ஆக்கியுள்ளார். இந்நூலுக்கு "சாவித்திரிசரிதம்" எனப் பெரிடப்பட்டுள்ளது.

Regal Jaffna
10th and 11th
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
Shaft's
Big Score
(Action-Color)

### பாடசாலைகளில்

# இலக்கிய மன்றங்களின் அவசியம் பற்றி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

மன்னுர் விடத்தல்தீவு ரோ. க. த. கலவன் வித்தியாலய 9ம், 10ம் வகுப்பு மாணவர்களுக்கான தமிழ் இலக்கிய மன்றத்தை வித்தியாலய அதிபர் திரு. பி. இராயப்பு சம்பிரதாய முறைப்படி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அங்கு அவர் உரையாற்றுகையில் "இத்தகைய தமிழ் இலக்கிய மன்றங்கள் பாடசாலைகளில் உருவாக்கப்படுவது உயர்தர வகுப்பு மாணவர்களின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவதோடு இன்றைய கல்வித்திட்டத்துக்கு அமைய மாணவர் தாய்மொழியில் பரந்த அடிப்படையில் அறிவைப்பெறுவதற்கும் வாய்ப்பாக இருக்கின்றது" எனக் கூறினுர். மன்றத்தின் இயக்குநர் திருமதி உஷா செல்வரெட்ணம் ஆசிரியை உரையாற்றுகையில்:– இம் மன்றத் மன்றத்தின் வளர்ச்சிக்குமாணவர்களின் பொறுப்புணர்ச்சியையும், பணியையும் வலியுறுத்தினுர். நிர்வாகஸ்தர்கள் பின்வருமாறு:

போஷகர்: திரு. பி. இராயப்பு (அதிபர்), இயக்குநர்: திருமதி உஷா செல்ரெட்ணம் (ஆசிரியை), தலைவர்: செல்வன் செ. குயின்சன் ராஜா, உபதலைவர்: செல்வன் யோ. கியோமர் பயஸ், இணைச்செயலாளர்கள்: செல்வன் செ. சத்தியகாந்தன், செல்வி ச. மேரிய சுந்தா, பொருளாளர்: ச. எறிக் செல்தராஜா.

# சந்தேகநபர்களைத்தேடி பொலிஸார் வலைவீச்சு

## கைவிடப்பட்ட 4 சைக்கிள்களை பொலிஸார் கைப்பற்றினர்

(மாவிட்டபுரம்)

கீரிமலை கத்திக்குத்தும் சம்பவம் தொடர்பாக 8 சந்தேநபர்கள் பொலிசாரால் தேடப்பட்டுவருகிருர்கள்.

கீரிமலையில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் சாணைக்குட்டி தனபாலசிங்கம், சாணைக்குட்டி கந்தசாமி ஆகியோர் பலத்த காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் ஒருவரும் மற்றவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக பாலசுப்பிரமணியம், ஆறுமுகம், தர்மலிங்கம், மகாராஜா, சுந்தரலிங்கம், குணலிங்கம், இரத்தினம், சந்திரலிங்கம் ஆகிய 8 சந்தேக நபர்களை காங்கேசன்துறைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

சம்பவத்தின்போது சந்தேக நபர்களால் விட்டுச்செல்லப்பட்டதாகக் கூறப்படும் நாலு சைக்கிள்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 27ம் திகதி
திங்கட்கிழமை
(10—5—82)

மேடம்: அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும். அபாயமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்,

இடபம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும் களஸ்திரவழியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு. புதிய நண்பர்கள் சேருவார்கள்.

மிதுனம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றக் கூடும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம். நண்பர் ஒருவர் காலைவாரிவிடக்கூடும்.

கடகம்: மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பொன்ஞனதினம்

சிங்கம்; கற்றதனுலான பலன் இன்று கைமேல்கிடைக்கும். கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

கன்னி: மக்கள்மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும், உள்ளத்தில் உவகையும் துள்ளும். இன்று அதிக ஆதரவும் கிடைக்கலாம்.

துலாம்: அவசரம் வேண்டாம். ஆயுதபீடைக்கு இடமுண்டு. நத்தை வேகத்தில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கும்.

விருச்சிகம்: சிறு விடயங்கள் கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம். வீணை சந்தேகங்களும் தோன்றக்கூடும். நன்ருக ஆலோசித்தபின் செயலாற்றவும்.

தனு: பேச்சு வன்மையால் புகழும் கிடைக்கலாம். ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் உதவ முன் வருவார்கள். குடும்பத்தில் பரவச நிலை தென்படும்.

மகரம்: ஆசையின் விடாயில் அலைமோதும். நெஞ்சம் வேண்டாத நடவடிக்கைகள் உங்களை விபரீதத்தில் மாட்டிவைக்கும். கவனம் வேண்டும்.

கும்பம்: மருத்துவத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான தினம். இன்று உங்கள் உறவினர் கொண்டாட்டமும் உண்டாம்.

மீனம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளை தேடிக்கொள்வீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# பொங்கல்விழா

(மாங்குளம்)

மாங்குளம் துணுக்காய் ரோட்டில் ம் கட்டையில் அமைந்துள்ள வன்னிவிளாங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் பொங்கல்விழா ஜூன் 4ம் திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறஇருக்கின்றது. விசேட பஸ்சேவைகளையும் பாதுகாப்புக்களையும் அன்னதான சபையினர் ஏற்படுத்தி வருவதுடன் அன்னதானம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

# புதுவருட நிர்வாகிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவ மக்கள் வங்கி பச்சுவர்விடுதி விளையாட்டுக் கழக நிர்வாகிகள் தெரிவு நிமல் விக்கிரமாராச்சி தலைமையில் மக்கள் வங்கி விடுதியில் இடம் பெற்றது. தலைவராக க. உதயகுமாரன், செயலாளராக அ. ஜேம்ஸ், பொருளாளராக டி. டி. தனபால ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மனோகராவில்
ஹவுஸ் புல் ! ஹவுஸ் புல் !! ஹவுஸ் புல் !!!
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
இந்தியாவில் 250 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியதுடன்
வெள்ளி விழாவில் பரிசு பெற்ற சிறந்த காதல் காவியம்.
கார்த்திக்
ராதா
தியாகராஜன்

இன்னும்
பலர்
திறம்பட
நடித்த
பாரதிராஜாவின் திரைப்பட உலகில் ஒரு நிலையான இடத்தைப்
பெற்றுக்கொடுத்திருக்கும் காதல் காவியம் தான்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாதபடியால் ஆசனங்களுக்கு முந்துங்கள்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சிமெந்து ஷீட் கூரைக்கு தகுதியான தீராந்திகள் 10'×4''×2'', 14'×3''×2'', 14'×2½''×2½'' அடிக்கு முறையே ரூ. 5/-, 4/-, 3/-. முதிரை சமண்டலே வேம்பு முதலிய இனங்களும் உண்டு. இடம்: மானிப்பாய், நேரம் முன்ஏற்பாட்டின்படி விளம்பர இல. 3141 மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 3141

யாழ். திருமுறை மன்றத்தினரிடம் தஞ்சாவூரில் இருந்து தருவிக்கப்பெற்ற புதிய வீணைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சி. கிருஷ்ணமூர்த்தி, திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். 3140

## தேவை

1970/1972மொடல் வோக்ஸ்வகன், மொறிஸ் ஒக்ஸ்போட், மைனர் 1000-7 சிறிக்கு மேலானது. கொண்டுவரவும் மனேஜர் H. P. T., 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். 3135

Refrigerator Technicians குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவை செய்தால் உற்பத்திச்சாலேயில் பயிற்சி அளிப்பதற்குக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து, நற்சான்றிதழ்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்; 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3095

## வகுப்பு

எயர் கொண்டிசன் புதிய வகுப்பு 10 – 5 – 82 – ல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:- Auto Cool Engineers, கந்தப்பசேகரம் வீதி (சாந்தி சினிமா முன்பாக). யாழ்ப்பாணம். 3085

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பாடசாலேவிட்டுவிலகியோர் தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்கள் ஆனி தொடக்கம் பாடசாலே நேரங்களில் நடாத்தப்படும். விரும்பியோர் 18-5-82க்கு முன் விண்ணப்பிக்கவும்.

1. ஒட்டுதலும் பொருத்துதலும் (வெல்டிங் பிற்றிங்)
2. மின்னிணைப்பும் மின்சாரக் கருவிகள் திருத்துதலும்.
3. தையலும் உடையமைத்தலும்(பெண்கள் மட்டும்)

மின்னிணைப்புப்பயிற்சிக்கு க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது விஞ்ஞானபாடங்களில் சித்தி விரும்பத்தக்கது.

அதிபர்.

3102

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
நல்லூர் என்னும் இடத்தைச் சேர்ந்த திருமதி எமிலி நல்லம்மா நதானியேல் என்பவரினதும் மரண சாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல: T/3665

1. கேபேட் வில்லியம் அருணேதயதாஸ் நதானியேல்
2. ஆதர் வில்சன் நதானியேல் சந்திரபிரகாஸ் இருவரும் நல்லூர்.
3. ஜேம்ஸ் விக்ரர் செல்வரத்தினம் நதானியேல் 114, வெலுவான பிளேஸ் டெமற்றகொட.

மனுதார்கள்

மேலே இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான பரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டதெனவும் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால்அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளேப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆந்நாளன்று திகதியிடப்பட்டது.

3112

## அ. சே. எ. அதிசிறப்புப் பரீட்சை

அலுவலக முகாமை
அலுவலக முறைமைகள்
ஆகிய
பாடநெறிக் குறிப்புகள்
பெறவிரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதுக
சி. எஸ். சின்னேயா
முன்னேநாள் இ. நி. சே. முகாமை விரிவுரையாளர்
148/3, கின்சி வீதி, பொறளே, கொழும்பு-8.
3099

## உங்கள் பணத்திற்கு மாதாந்தமும், முதிர்ச்சியிலும் மிகக் கூடுதலான வட்டி வழங்கப்படும்

| | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 1 வருடம் ரூபாய் 1000/- | 24% | 26% |
| 2 வருடம் ரூபாய் 5000/- | 25% | 27% |
| 3 வருடம் ரூபாய் 25,000/- | 27% | 30% |
| 3 வருடம் ரூபாய் 50,000/- | 30% | 33 1/3% |

**House & Property Trades Jaffna Ltd.**
3, நவீன சந்தை, (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

# படக்காட்சியின் போது கத்திக்குத்து!

(பண்டத்தரிப்பு)

தேவாலயத்தில் நடைபெற்ற ரி. வி. படக்காட்சியைப் பார்க்க வந்த வாலிபர் ஒருவர் தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலேயில் அனுமதிக்கப்பட்டார்.

சில்லாலேயைச் சேர்ந்த அ. வேதநாயகம்என்னும் மேற்படி வாலிபர் சில்லாலே கதிரைமாதா ஆலயத்தில் நடைபெற்ற டி. வி.படக்காட்சியை பார்க்கச் சென்றபோது அங்கு வைத்து இன்னெரு நபரினல் ஆயுதம் ஒன்ருல் தாக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிசில் செய்யப்பட்ட முறைபபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரான அதேஇடத்தைச் சேர்ந்த ஆரோக்கியநாதர் என்பவர் இச்சம்பவம் தொடர்பாக பொலிசாரினல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தொழில்நுட்பப்பிரிவு தேவை

கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி தொழில்நுட்பப் பிரிவுப் போதனசிரியர்கள்

1. வெல்டிங் பிற்றிங் போதனசிரியர்

தகமை: 5 வருடத்துக்குமேல் நுட்பசேவையாளராக அநுபவம் உடையவர் ஆக இருத்தல் வேண்டும்.

2. மின்னிணைப்பும் மின்சாரக்கருவிகள் திருத்தலும் ஆகியனவற்றின் போதனசிரியர்

தகமை: குறைந்தது இரண்டுவருடம் தொழில்நுட்பக்கல்லூரியில் பயின்ற தராதரம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

3. தையலும் உடையமைத்தலும் போதனசிரியர் (பெண்கள்)

தகமை: பயிற்சிபெற்ற நுட்பசேவையாளர் விரும்பத்தக்கது.

குறிப்பு: குறைந்தது 5 வருடம் தொழில் அனுபவம் உடையவர் விரும்பி எடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பங்கள் 18-5-82க்கு முன்பாக
அதிபர்,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
தொழில்நுட்பப்பிரிவு, கோப்பாய்.
என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3101 அதிபர்

## நகரில் தாராளமாக கிடைக்கின்றது........

## நிப்போன்கிசென் V.H. F.

எல்லா அலேவரிசைகளுக்கும் ஏற்ற
அன்ரன 10GY — 213
10 இணைப்புக்கள் கொண்டது.
2 தொடக்கம் 12 வரையிலான
(VHF) திறன்மிக்கது.

75 ஒம்ஸ் / 300ஒம்ஸ் Out - Put
கொண்டது நேர்த்தியான குழாய்கள் கொண்டது.

ரூபா 475 மட்டுமே

| இந்தியா அலேவரிசை-4 | ரூபவாஹினி அலேவரிசை |
|---|---|

தெளிவாக பார்க்ககூடிய வகையில் அமைந்தது.

பிரதம விநியோகஸ்தர்கள்:

**பேனேஷியா லிமிட்டெட்**

விற்பனை முகவர்கள்:
கொழும்பு: 172, கேசர் வீதி, கொழும்பு. போன்: 26598, 22376
யாழ்ப்பாணம்: 95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் 7697
திருகோணமலே: 57, தபால் நிலேய வீதி, திருகோணமலே

மற்றும் நாடுபூராகவும் பெறலாம்.

## மறைவுக்கு அனுதாபம்

(சுழிபுரம்)

மறைந்த சமயத் தொண்டர் வித்துவான் கா. கி நடராசன் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் நடாத்திய இரங்கல் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நோயாளருக்கு உணவுப் பண்டங்கள்

(மன்னர்)

மன்னர் அரசினர் ஆதார வைத்திய சாலேயில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு மன்னர் பொலிசாரினல வெசாக்தினத்தன்று உணவுப்பண்டங்கள் வழங்கப்பட்டன.

இதற்கான நடவடிக்கைகளே மன்னர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் மன்னர் பொலிஸ் நிலேயப்பொறுப்பதிகாரி திரு. எஸ். குணவர்த்தன ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

## விண்ணப்பப் படிவம் தட்டுப்பாடு

[மன்னர்]

மன்னர் கச்சேரியில் கடந்த சில மாதங்களாக பாஸ்போட்டிற்கான கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவம் விநியோகிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனல் 'பாஸ்போட்' விண்ணப்பப்படிவம் பெறுவோர் வெளியில் 15 ரூபா கொடுத்து வாங்கவேண்டும். அல்லது கொழும்புசென்று பெற்றுக் கொள்ளவேண்டிய அவலநிலே ஏற்பட்டுள்ளது.

## தமிழ் இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

மாலே 5-45 மணி: அண்ணமலே இசைக்கல்லூரி மாணவர்கள் பாட்டு.

6-30 மணி: செல்வி ரஞ்சனி வீரசிங்கம் வயலின். செல்வன் வி. பி. கிருபாகரன் மிருதங்கம்.

7-45 — 9-00 மணி: திரு. எம். வர்ணகுலசிங்கம்-பாட்டு, திரு. கே. சித்திவிநாயகம் வயலின், திரு. ப. சின்னராசா மிருதங்கம்.

## பிள்ளேத்தமிழ் நூல் வெளியீடு

(சுழிபுரம்)

''அறிவு, ஆற்றல், துணிவு யாவும் நிறையப் பெற்றவர் பண்டிதர் அ. ஆறுமுகம். இவரது எழுத்தில் ஒருபுதுமையும் நல்ல பல கருத்துக்கள் நிறைந்தனவாகவும் இருக்கக் கண்டு கொள்ளலாம். விசவத்தனே முருகன் பிள்ளேத் தமிழ் நூல் வெளிவருவதன் மூலம் பண்டிதர் அ. ஆறுமுகத்தின் ஆற்றல் மேலும் மிளிரும்''

இவ்வாறு பண்டிதர் பொன்பாக்கியம் பிள்ளேத்தமிழ்நூல் வெளியீட்டுக் குழுவினர் வழங்கிய வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். திரு ப. சி. செல்வநாயகம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. திருவாளர்கள் மு. கிருஷ்ண பிள்ளே, இ. ஆறுமுகம், க. வாமதேவன் ஆகியோர் பேசினர்.

## ஈராக் படை வெளியேறியது

தெஹ்ரான், மே 9

ஈரான் மாநிலமான குல்திஸ்தானிலிருந்து ஈராக் படைகளே விலக்கிக்கொண்டது. ஈரான் — ஈராக் மோதலின் 9-வது நாளான நேற்று ஈராக் படைகளே விலக்கிக்கொண்டது என செய்திகள் தெரிவிக்கின்றன.

(கு)

# ''மாவட்ட அபிவிருத்திசபை:

# நிதி வசதியில்லாத சபையாகவே இருக்கிறது''

(கோண்டாவில்)

மாவட்ட அபிவிருத்தி சபைகள் எமக்குக் கிடைத்தும் இன்னும் எமது தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையே என்று மக்கள் கருதலாம். ஆனல் மாவட்ட அபிவிருத்திசபையை பொறுத்தவரையில் நிதிவசதியில்லாத சபையாகவே இருக்கிறது.

தாவடியில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் பேசிய மாணிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

தாவடி கிராமோதய சபை தலைவராக திரு. இரா. சந்திரசேகரம் தெரிவுசெய்யப்பட்டதை பாராட்டுமுகமாக தாவடி மக்களினல் தாவடி மத்திய சனசமூக நிலைய முன்றலில் தலைவர் திரு. கே. கே. ஜெகநாதன் தலைமையில் இவ் வரவேற்பு விழா நடைபெற்றது. அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''ஒவ்வொரு தொகுதிக்கும் என்று அறிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 17 லட்சம் ரூபா அரசினல் ஒதுக்கப்படுகின்றது ஆனபோதிலும் ஒவ்வொரு கிராம சேவகர் மட்டத்திலும் பணத்தைப் பங்கீடு செய்துகொள்ளும் பொழுது 1 லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபாவே கிடைக்கின்றது. இது ஒரு பெரும் பணம் அல்ல இதனை வைத்தே, வீதி, மின்சாரம், பாடசாலை என்பவற்றிற்கு ஒதுக்க வேண்டியுள்ளது. நிர்வாகத்தை பகுதி அபிவிருத்தியைப் பரவலாக்கவேண்டும் என்ற அடிப்படையில் அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன் முதல்ப் படியாகத்தான் மாவட்ட அபிவிருத்திசபைமூலம் நிர்வாகமும் அபிவிருத்தியும் பரவலாக்கப்பட்டுள்ளது. மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு வங்கிகளிடம் இருந்து கடன் பெறுகின்ற அதிகாரம் உண்டு இதன் அடிப்படையில் கடந்த வாரம் இலங்கை வங்கித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளோம். இதன் அடிப்படையில் கடன் தருவதற்கும் சம்மதித்துள்ளார்கள். ஆனலும்கூட நாங்கள் இன்னும் இத் திட்டத்தை தொடங்கவில்லை.

அரசுதான் எமக்கு போதிய பணத்தை தராத போதிலும் கூட எம் கையில் அதிகாரம் இருப்பதன்மூலம் எமது பகுதி அபிவிருத்தியை செய்து கொள்ளமுடியும். யாழ்ப்பாணப் பகுதியில் பரவலாக மின்சார வசதிகள் காணப்படுகின்றன. இவைகூட ஆரம்பகாலத்தில் கடனைப்பெற்றே மேற்கொள்ளப்பட்டது.

கிராம மக்களின் ஆலோசனைகளையும் பெற வேண்டும் என்ற அடிப்படையிலேயே கிராமோதய சபைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு அப்பகுதி மக்களிலேயே தங்கியுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் கலாநிதி நடராசா பேசும்பொழுது கூறியதாவது: ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளையும் மக்களுக்கு கூறி ஆட்சிப் பொறுப்பையும் கையேற்றுக் கொள்கின்றன. பின்னர் அவை தமது மனம்போன போக்கிலேயே தொழிற்பட்டுக்கொள்கின்றன. இன்று நாம் மாவட்ட அபிவிருத்தி சபை என்ன செய்தது என்று மக்கள் கேட்டால் எதுவும் கூறமுடியாத நிலையில் இருக்கின்றோம்

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையைப் பொறுத்தவரையில் தலைவரின் துணிவு காரணமாக சிலவற்றையாவது செய்யக்கூடியதாக இருக்கின்றது. ஆனல் மற்றையமாவட்ட அபிவிருத்தி சபைகளைப்பற்றி கூற வேண்டியது அவசியமே இல்லை.

ஆரம்பத்தில் மாவட்ட அபிவிருத்திசபைக்கு பதினைந்து அதிகாரங்கள் உண்டு என்று கூறியது உண்மை. ஆனல் இன்று அதில் ஒரு அதிகாரம் கூட வழங்காத நிலையிலேயே காணப்படுகின்றது. இன்று மாவட்ட அபிவிருத்திசபைக்கென பணம் ஒதுக்கப்படாமையினல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியை நம்பியே இருக்கவேண்டியதாக உள்ளது

இதனை செலவு செய்வதற்கு மாவட்ட அபிவிருத்திசபை இல்லாதுபோனலும்தொகுதிக்கான நிதி செலவிடப்படும்.

மாவட்ட அபிவிருத்திசபை மூலம் எரிக்கப்பட்ட சுன்னகம் சந்தைக் கட்டிடத்தையே திருத்தமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றது. எல்லாவற்றையும் நோக்கும்போது இது ஒரு ஏட்டுச்சுரைக்காயாகவே இருக்கின்றது.

'மாவட்ட அபிவிருத்திசபைகளை எடுத்து நோக்குகின்றபோது அவற்றிற்கே ஒரு அதிகாரமற்ற சபையாகவே இருக்கின்றது. இந்நிலையில்கிராமோதய சபைகள் என்ன செய்ய முடியுமென்பது கேள்விக்குஉரியதே.

இன்று வேலைவாய்ப்புக்களை மாவட்ட அபிவிருத்திசபைகளே வழங்கவுள்ளதாக பேசப்படுகின்றது. அதுகூட எவ்வளவு தூரம் உண்மையென்று கூற முடியாது'' என்ருர்.

## ரூ. 22,000 கொள்ளை:

# கையடையாளங்கள் நுணுக்கமாக பரிசோதனை

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி வளலாயில் இடம்பெற்ற துணிகரக் கொள்ளை தொடர்பாகக் கையடையாள நிபுணர்களால் கையடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 4-ம் திகதி இரவு எட்டரை மணியளவில் அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த கந்தசாமி சிவஞானசுந்தரம் என்பவரது வீட்டுக்கு முகமூடி அணிந்து துப்பாக்கிகள், வாள் சகிதம் சென்ற 7 பேர் கொண்ட கோஷ்டி வீட்டிலிருந்தவர்களை துப்பாக்கிமுனையில் மிரட்டி அங்கிருந்த 22 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இதுதொடர்பாக கையடையாள நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுக் கையடையாளங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் கையில் றப்பர் உறைகள் அணிந்திருந்ததால் கையடையாளங்கள் அதிகமாக இல்லாதிருந்தபோதும் கையடையாள நிபுணர்கள் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து கையடையாளங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இக்கொள்ளை இடம்பெற்ற அதே பாணியில் அண்மையில் தொண்டமனற்றில் ஒரு கொள்ளை இடம்பெற்றதாகவும், அக்கொள்ளைக்கும், இதற்கும் தொடர்பிருக்கலாமெனவும்சந்தேகிக்கும் பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

ஹோம் பினன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

ORION-12'' (T. V. BLACK and WHITE)

விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்

விலை ரூபா 2100/-மட்டுமே

எம்மிடம் உள்ள அவசர தேவையான

மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES-மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

| தலைமை காரியாலயம்: | கிளை காரியாலயம்: |
|---|---|
| ஹோம் பினன்ஸ் லிமிட் | ஹோம் பினன்ஸ் லிமிட் |
| இல. 463, காலி வீதி, | இல. 82, கன்னதிட்டி வீதி, |
| கொழும்பு—3 | யாழ்ப்பாணம் |
| தொலைபேசி;58910 | தொலைபேசி: 8310 |

# கண்காணிக்க நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாகச் செல்லும் வெள்ளவாய்க்காலுக்குள் கண்டகண்டபொருட்களை வீசுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படஉள்ளது

மேற்படி வெள்ளவாங்காலில் அசுத்தநீர் தேங்கிநின்று பெரும் அசௌகரியத்தை விளைவிப்பதால் இதனை துப்பரவுசெய்து தருமாறு தெல்லிப்பழை கிராமமுன்னேற்றச் சங்கம் நீர்வளச்சபையினரைக் கோரியிருந்தது.

ஆனல் இந்த வாய்க்காலில் கண்டகண்ட பொருட்கள் போடப்பட்டுள்ளதாகவும் தொழிலாளர்கள் இதனுள் இறங்கி வேலை செய்யமுடியாதென்றும் நீர்வளச்சபையினர் மறுத்துள்ளனர்.

இதனையடுத்து இவ்வாய்க்காலில் கண்டகண்ட பொருட்களை வீசுவோர் மீது கண்காணிப்புச் செய்யப்படவிருக்கிறது. (க)

# நீர்ப்பாசன வசதி அளிக்கப்படும்

(துணுக்காய்)

வவனிக்குளம் பாரிய நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் இவ் வருட சிறுபோக நெற்செய்கைக்கு ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ஏக்கர் நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுமென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் தலைமையில் காணி நீர்ப்பாசன, விவசாய திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் குடியேற்றவாசிகளும் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுமென்றும் அதற்கிடையில்சகல விவசாயிகளும், நிலவரி, நீர்வரி என்பவற்றை செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுதல் வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது. (க)

# உழவுயந்திரம் சேதமடைந்தது

(துணுக்காய்)

முல்லைத்தீவு பெருந்தெருக்கள் திணைக்களத்தைச் சேர்ந்த உழவு இயந்திரமொன்று துணுக்காய்-மாங்குளம் பிரதான வீதியிலுள்ள பாலமொன்றுக்குள் பாய்ந்து பலத்த சேதமடைந்துள்ளது. (க)

## ஊர்காவல்...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்துவதாகவும் ஊர்காவல் படையை கடுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காது போனல் எதிர்காலத்தில் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தலாம் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

# இறைவன் அருளின்றி எதுவும் நடக்காது

(அரியாலை)

''கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக வாழவேண்டும். கிறிஸ்தவர்களைக் கொன்று குவித்தரோமசக்கராதிபத்தியமும், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய யூதர்களும் கடவுளின் சித்தத்தை நாம் நிறைவேற்றுவதாக எண்ணிவாழ்ந்தார்கள் இவர்கள் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவதாக எண்ணினலும் அவர்கள் கடவுளின் சித்தத்தை மீறுபவர்களாகவேவிளங்கினர்கள்

இவ்வாறு யாழ்ப்பாண அர்ச்சகன் அருட்திரு சாம் டி, ஹோர்சிங்டன் அடிகளார் நல்லூர் பரி யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில்; மனிதரையே பிடித்து உண்டு ருசி கண்ட ஆபிரிககாக் கண்டத்தில் வாழ்ந்த மக்களிடம் கிறிஸ்துவின் சுவிசேஷமும் கடவுளின் சித்தமும் எடுத்துக்கூறப்பட்ட பின்னர் தாம் மனிதரை உண்ணுவது கடவுளின் சித்தத்துக்கு விரோதமான செயல் என எண்ணி அதனைக் கைவிட்டார்கள். கடவுளின் சித்தத்திற்கும் கீழ்ப்படியாதவர்களாக வாழுகின்ற அருவருக்கத்தக்க தாழ்வான நிலைமையை அடைந்து கொண்டுவருவது வெட்கமான செயலாகும். கடவுளே எம்மை இரட்சித்தார். அவருடைய சித்தம் இல்லாமல் எதுவும் நடக்காது என்ற மனவுணர்வு இன்று எமக்கு அவசியமாகிறது'' என்று குறிப்பிட்டார்.

திருவிருந்தாராதனை கலாநிதி லூதர் ஜெயசிங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.

# நீதியரசர்கள் ராஜினமா பற்றிய முடிவு

மணிலா, மே. 9

பிலிப்பைன்ஸ்சில் 13 நீதியரசர்களின் ராஜினமா பற்றி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தீர்மானிக்கப்படுமென்று ஜனதிபதி பேர்டினன்ட் மார்க்கஸ் அறிவித்துள்ளார்.

பிலிப்பைன்சில் சட்டப் பரீட்சை விடைத்தாள்கள் விவகாரமொன்றையடுத்து பிரதம நீதியரசர்கள் உட்பட 12 நீதியரசர்கள் சடந்த வியாழக்கிழமை ராஜினமாச் செய்தது தெரிந்ததே. [வெ]

# ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

மாதகல் மேற்கு சன சமூக நிலைய 35வது ஆண்டுவிழா எதிர்வரும் சனிக்கிழமை 15-5-82 மாலை நிலையத் தலைவர் திரு. க. தங்கராசா தலைமையில் நடைபெறஉள்ளது. பிரதம விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார்.

## சட்டவிரோத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குளம் என்னுமிடத்தில் காட்டுயானை ஒன்றினை இந் நபர் தனது அனுமதிப்பத்திரம் உள்ள துப்பாக்கியால் சுட்டுக் கொன்ருராம்.

தகவல் அறிந்து ஸ்தலத்துக்கு விரைந்த வன விலங்கு பாதுகாப்பு அதிகாரி திரு. சில்வா, வவனியா பொலிஸ் சார்ஜண்ட் திரு. என். ஏ. விஜய சூரியா ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந் நபர் வவனியா மாவட்ட நீதிபதி திரு. ஏ. டி. எம். கே. பெத்தியாகொட முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். துப்பாக்கியைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## பொதுச்சபையில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்தலைமையில்நடைபெற்ற வெளியீட்டு விழாவில் திரு. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:

முன்னள் யாழ் மேயர் துரையப்பா கட்டியெழுப்பிய சங்கிலியனின் சிலைக்கு மாலைபோடுவதா வீரம்? அச்சிலை அமைக்கப்பட்டபோது அதற்கு மாருக எழுதியவர்கள் இன்று அச்சிலைக்கு மாலை அணிவிக்கிருர்கள். உண்மைத் தமிழர் ஒருவரால் சிலை அமைக்கப்பட்டிருந்தால் அதற்கு மாலையிட்டாலாவது பொருத்தமாயிருக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில் கோட்டை டியபாராளுமன்றத்தின் அமர்வில் தனது உரையை திரித்து வெளியிட்டதுடன், அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் கூருதவற்றைகூட கூறியதாக தந்தையின் படத்தைத் தாங்கிவரும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது என்ருர்.

நல்லூர் எம். பி திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில்: தாம்அமைக்கவுள்ளவிஞ்ஞான சோசலிச ரீதியிலான தமிழ் ஈழத்தின் உண்மை நிலையைத் திரித்துக் கூறுது, எதிர்க் கருத்துக்கட்கும் பதிலளிக்கும் வகையில் புதிய ஏடு அமையுமெனக் குறிப்பிட்டார். (சி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ளு மே மீ 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.